Registered as a Newspaper in Sri Lanka

# ஈழமுரசு

முரசு 2 30-6-1985 ஞாயிற்றுக்கிழமை (ஆனி 16 ஷவ்வால் 11) முழக்கம் 145

## இளைஞர் விடுதலை இயக்கங்களுடன் கூட்டணி பேசும்! அதற்குமுன்...

தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் பூட்டான் மகாநாட்டில் கலந்து கொள்வதெனத் தீர்மானித்தால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு நாளை அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் என கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் நேற்றுத் தெரிவித்துள்ளார். இம் மகாநாட்டில் கலந்துகொள்ளும் தமிழர் பிரதிநிதிகளிடையே பொதுவான ஒரு கருத்தை அடைவதற்காகவே இச்சந்திப்பு நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இம்மாதம் 18-ம் திகதிக்குப்பின் இடம்பெற்ற இலங்கை சம்பவங்களை இந்தியா கோரியுள்ளது

யுத்த நிறுத்த அறிவிப்பு அமுலுக்கு வந்தபின்னர் இலங்கையில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய பூரண பட்டியல் ஒன்றைப் பெறுவதற்கான ஒழுங்குகளை இந்திய அரசு மேற்கொண்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது. இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்திடமே இவ் அறிக்கை கோரப்பட்டுள்ளதாம்.

யுத்த நிறுத்த அறிவிப்பு வெளிவந்த இம்மாதம் 18-ம் திகதிக்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் பற்றியே விபரங்கள் கோரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இது பற்றி நான்கு விடுதலை இயக்கங்கள் குறிப்பிட்டிருந்ததும் கவனிக்கத்தக்கது.

பூநகரியில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டது உட்பட யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார்ப் பகுதிகளில் சிறுசிறு சம்பவங்கள் நடைபெற்றதாக இந்திய பத்திரிகைகளும், மற்றும் செய்தி நிறுவனங்களும் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இவைகளைச் சுட்டிக்காட்டி இது பற்றிய விபரங்களை அனுப்புமாறு இந்திய அரசு கேட்டுள்ளதாம்.

★ விடுதலைப் புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ்

# பூட்டான் மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என நான்கு இயக்கங்களும் முடிவு

## போர் நிறுத்த ஒப்பந்தத்தை படைகள் மீறி விட்டதே காரணம் என்று அறிவிப்பு

(புதுடில்லி)

ஜூலை மாதம் 8-ம் திகதி பூட்டானில் நடத்தப்படவிருக்கும் சந்திப்பு மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என்று நான்கு பிரதான தமிழீழ விடுதலை இயக்கங்கள் முடிவெடுத்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ்., ஈரோஸ் ஆகிய நான்கு இயக்கங்களுமே இம் முடிவை எடுத்ததாக 'ராய்டர்' செய்தி தெரிவிக்கின்றது.

மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ரெலோவின் தலைவர் திரு. ஸ்ரீசபாரத்தினம் நேற்று முன்தினமே அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இம் மாதம் 18ம் திகதி அமுலுக்கு வந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசின் பாதுகாப்புப் படைகள் மீறியுள்ளதாகவும் இதனால் மகாநாட்டில் பங்கு பற்ற விரும்பவில்லை எனவும் மேற்படி நான்கு அமைப்புக்களும் கூட்டாகத் தெரிவித்தன.

முதலில் இந்திய வானொலி நேற்றுக் காலை இதனைச்

—8ம் பக்கம் பார்க்க

## யுத்த நிறுத்தத்தைப் படைகள் மீறவில்லை என்கிறார் அமைச்சர் லலித்

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாதுகாப்புப் படைகள் நடந்துள்ளதாக நான்கு பிரதான விடுதலை இயக்கங்கள் தெரிவித்திருந்த குற்றச்சாட்டை தேசியப் பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி மறுத்துள்ளார்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழ புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ புரட்சி அமைப்பு ஆகிய நான்கு இயக்கங்களும் சென்னையில் நேற்று கூட்டாக விடுத்த அறிக்கையில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் போர் நிறுத்தத்தை மீறி

—8ம் பக்கம் பார்க்க

## நயினை அம்மன் நாளைதேர்; விசேஷ பஸ், படகு சேவைகள்

(மண்கும்பான்)

நாளை நடைபெறும் நயினாதீவு நாகபூசணி அம்மன் தேர்த் திருவிழாவை முன்னிட்டு விசேஷ பஸ், படகுச் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பொது ஜன தொடர்பு அதிகாரி திரு. த. குலசேகரம்பிள்ளை எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்தே இம் மேலதிக பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தேர்த்திருவிழா ஏற்பாடுகள் பற்றி இராணுவ அதிகாரி

—8ஆம் பக்கம் பார்க்க

## நாளை சந்திப்பு நடைபெறாது

நாளை நடைபெற ஏற்பாடாகியிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களின் முக்கிய சந்திப்பு பின்போடப்பட்டுள்ளதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## இவர்களுக்கு கட்டுப்பாடு

ஊர்காவற் படையினர் இனிமேல் குறைந்தது இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்களுடனுவது கடமையில் ஈடுபட்டிருக்கும் போது மட்டும் தான் ஆயுதங்களைப் பாவிக்க முடியும் என்று கட்டளையிடப் பட்டுள்ளது.

## பாக்குநீரிணை சோதனையால் ஆயுதங்கள் வர முடியாதாம்!

பாக்கு நீரிணையில் இலங்கை இந்திய கடற்படை ரோந்து பலப்படுத்தப் பட்டுள்ளதால் பனாகொடை மகேஸ்வரனின் தலைமையிலான இயக்கம் உட்பட சகல சிறிய இயக்கங்களும் தென்னிந்தியாவிலிருந்து ஆயுதங்களைக் கொண்டுவர முடியாமல் இருக்கின்றன என்று 'லங்காபுவத்' செய்தித்தாபனம் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி நேற்று செய்தி வெளியிட்டது.

இலங்கையில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வருவதற்கு முன்னர் கொண்டுவரப்பட்ட ஆயுதங்களே இப்போது பாவ

—8ம் பக்கம் பார்க்க

## ஜூலை 2க்கு முன் புதிய ஆசிரியர் பதவியேற்குமாறு அறிவிப்பு

அழுத்கம, மகரகம, விராகம ஆகிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலிருந்து தமது முற்சேவையை முடித்து வெளியேறி உதவி ஆசிரியர்களில் நியமனக் கடிதங்களைப் பெற்றவர்கள் அவற்றில் குறிப்பிட்ட மாவட்டங்களுக்குச் சென்று தமது பதவியை ஜூலை 2-ம் திகதியிலிருந்து பொறுப்பேற்க வேண்டும்.

இதுவரை நியமனக் கடிதம் கிடைக்காதவர்களுக்கு அவை விரைவில் அனுப்பி வைக்கப்படும். அவர்கள் நிய

— 8.ஆம் பக்கம் பார்க்க

## 'மினி தியேட்டர்'கள் பற்றி விடுதலை புலிகள் கவனத்திற்கு

யாழ்ப்பாணப் பகுதிகளில் இப்பொழுது புற்றீசல் போல ஆரம்பமாகி வரும் 'மினி தியேட்டர்கள்' பற்றியும் விடுதலை இயக்கங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் கவனத்திற்கு என விடுதலை விரும்பிகளால் யாழ். நகரில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில், மினி சினிமாக்களில் புளூ பிலிம்கள் காட்டப்பட்டு வருவதாகவும், இது விடுதலைப் போராட்டத்தில் இளைஞர்களின் உணர்வுகளைத் திசை திருப்பிவிடும் என்பதால் இவ்விடயத்தையிட்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டிருக்கின்றார்கள்.

மினி சினிமாக்களில் அனேகமாக இளைஞர்களைக் கவரக் கூடியதான ஆங்கிலத் திரைப்

—8ஆம் பக்கம் பார்க்க

## இன்று ஆனந்தராஜனின் இறுதிச் சடங்கு நடைபெறும்

சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. ஆனந்தராஜனின் இறுதிச் சடங்குகள் இன்று சுண்டிக்குளி சென். ஜோன்ஸ் சேமக்காலையில் நடைபெறும்.

இன்று காலை எட்டு மணிக்கு பூதவுடல் கல்லூரி பீற்றே மண்டபத்திற்கு எடுத்து வரப்பட்டு பொதுமக்கள், மாணவர் அஞ்சலிக்காகப் பிற்பகல் இரண்டு மணிவரை வைக்கப் பட்டிருக்கும்.

— 8ஆம் பக்கம் பார்க்க

national weekly

வாரமலர்

விலை: ரூபா இரண்டு

## இன்று

### சங்காபிஷேகம்

(சங்கானை)

வட்டுக்கோட்டை சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் சங்காபிஷேகம் இன்று காலை நடைபெறும். நண்பகல் மகேஸ்வர பூசையும், மாலை சண்முக அர்ச்சனை, திருவூஞ்சல் ஆகியவற்றுடன் நாதஸ்வரக் கச்சேரியும் இடம் பெறும்.

## வரி விளம்பரம்

### காணி விற்பனை

கிளிநொச்சி இரணைமடு குளத்திற்கருகாமையில் பூங்கா பக்கத்தில் 4 ஏக்கர் உப உணவுக்காகக் கொடுக்கப்பட்ட காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: கிரவுண் கிரைண்டிங் மில், கரடிப்போக்கு, கிளிநொச்சி.

### களவாடப்பட்டது

எனது கறுப்பு நிற அல்சசன் ஆண் நாய், வயது ஒன்று, பெயர் ''லக்கி'' களவாடப்பட்டு உள்ளது. தகவல் தரவும்: C. S. முருகையாபிள்ளை 89, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

கண்டுக்குளிப் பகுதியில் நல்ல சுற்றுடலில் புதிய பெரிய வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்க: திரு. ஜெயசிங்கம், 36, சந்தனமாதா கோவில் வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

## ஏல விற்பனை

ஒவ்வோர் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9-00 மணி முதல் 12-00 மணிவரை பாவிக்கப்பட்ட துண்டுக் கம்பிகள், முறுக்குக் கம்பிகள், ''ஆங்கில் அயன்'' எச், ஐ வடிவ உருக்கு திராத்திகள் என்பன லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏல விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் ஒவ்வோர் சனிக்கிழமையும் தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 3ம் கூற்று முடிவடைந்த உடன் முழுத் தொகையின் 1/3 பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு, மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும். பொருட்கள் விற்கப்பட்ட திகதியில் இருந்து 48 மணி நேரத்தில் விற்கப்பட்ட பொருட்கள் எங்கள் தொழிற்சாலை வளவில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை.
1985-06-25

பொது முகாமையாளர்
லங்கா சீமெந்து லிமிட்டெட்

## COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING COURSE

(BASIC LANGUAGE)

Commencement — 21.07.85 at 11 a.m.

Fees — 1500/-

Ideal for those who seek employment abroad.

**கன்ரேபியா கல்வி நிறுவனம்**

21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 24201




* புதுக்குடியிருப்பு, பாண்டியன் றோட், சிறீஸ்கந்தராஜா நாகலட்சுமி தம்பதிகளின் மகள் கிருஷ்ணானந்தி முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
* கோப்பாய் தெற்கு, அருள் நேசராஜா அருள்செல்வி தம்பதிகளின் மகன் நிலோஷான் முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.
* கொற்றுலத்தை, சின்னத்தம்பி தவமணி தம்பதிகளின் மகன் சுபாஸ்கரன் முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
* சட்டநாதர் வீதி, கிருஷ்ணசாமி நாகேஸ்வரி தம்பதிகளின் மகன் அருள்குமரன் ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.
* உரும்பராய் கிழக்கு காட்டு வயிரவர் கோவிலடி, முருகையா புஷ்பமலர் தம்பதிகளின் மகன் ஜெயரதன் இன்று பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.
* நுணாவில் கிழக்கு, தியாகராஜா ஐயர் கருணா தம்பதிகளின் மகள் தயானந்தா இன்று ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
* திருநெல்வேலி கிழக்கு, பாலசுந்தரம் கோகிலாம்பாள் தம்பதிகளின் புதல்வி மகிலா ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.
* திருநெல்வேலி கிழக்கு, இராசதுரை திலகவதி தம்பதிகளின் மகன் கலைச்செல்வன் பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.
* கொழும்புத்துறை, சின்னராசா மணி தம்பதிகளின் மகன் மோகனதாஸ் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

## நல்லூர் ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில்

### மகா யாகம்

மஹா கணபதி ஹோமம்
மஹா லக்ஷ்மி ஹோமம்
நவக்கிரக ஹோமம்
அஷ்டலக்ஷ்மி ஹோமம்

காலம்: திங்கட்கிழமை (1-7-85) காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது. அனைவரும் இந்த யாகத்தில் பங்குபற்றி விநாயகப் பெருமானது திருவருளை பெற வேண்டுகிறோம்.

கைலாச பிள்ளையார்
கோவில்

## ஷப்ரு

## யூனிக்கோ பினன்ஸ் லிமிட்டட்

உங்கள் முதலீடுகளுக்கு அதிஉயர் வட்டி **30%** ஷப்ரு தருகிறது

★ நிதி உதவி!
★ நிலையான வைப்பிற்கு அதிஉயர் வட்டி!
★ உழைக்கும்போதே சேமிப்பதற்கு புதிய வழி!
★ தவணை முறை கொள்வனவு வசதி!

★ வெளிநாட்டு உள்நாட்டு காசோலைகள் மூலமாகவும் நிலையான வைப்புக் கணக்கை (Fixed Deposit) ஆரம்பிக்கலாம்
★ மாதாந்த சேமிப்புத்திட்டம் உழைப்பாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்
★ முதலீடுகளுக்கு எதிராக கடன் வசதியுண்டு
★ எங்களிடம் முதலீடு செய்தவர்கள் முதலீடுகளுக்கு எதிராக தவணைமுறை கொள்வனவு செய்து கொள்ளலாம் அல்லது தவணைமுறை கொள்வனவு செய்பவருக்கு பிணை நிற்கலாம்

## SHABRA

## UNICO FINANCE LIMITED

207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 22073

61, நியு புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4.
தொலைபேசி: 589310

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

நெருங்கி வரும் கல்லூரியின் நூற்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு பழைய மாணவர்களின் பட்டியலை பூரணப்படுத்து முகமாக பின்வரும் விபரங்களை கல்லூரி அதிபருக்கு எதிர்வரும் யூலை மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

1. முழுப் பெயர் :-
2. தொழில் :-
3. தொழில் முகவரி:-
4. வதிவிட முகவரி :-
5 கல்லூரியில் சேர்ந்த ஆண்டு :-
6. விலகிய ஆண்டு :-

பொ. ச. குமாரசாமி
தலைவர்

ந. வித்தியாதரன்
செயலாளர்

## உடனடி வேலை வாய்ப்பு

### வெல்டர்கள் (WELDERS)

25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட அனுபவமுள்ள வெல்டர்கள் தேவை. முன் அனுபவச் சான்றிதழ்களுடனும் பாஸ்போர்ட் புகைப்படங்கள் இரண்டுடன் ஜுலை முதலாம், இரண்டாம், மூன்றும் திகதிகளில் காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் கீழ்க்காணும் முகவரியில் நேரடியாக உடன் தொடர்பு கொள்ளவும்.

R. நிக்கொலஸ்
C/o. R. இராமச்சந்திரன்
புதிய இல: 145, நாலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

ஈழமுரசு வாரமலர்

# பிள்ளையின் வளர்ச்சிக்கு தாயிலும் பார்க்க தந்தையே பிரதானம்

சி. ஈ. ஆனந்தராஜன்
அதிபர் - யாழ் பரியோவான் கல்லூரி

டாக்டர் டபிள்யூ ஆர். ஹோம்ஸ் எழுதிய "ஜவ்னு 1980," அதாவது "1980இல் யாழ்ப்பாணம்," என்ற நூலில் "யாழ்ப்பாணமும் மெதுவாக மாறிக்கொண்டு போகின்றது. ஆகையால், அதனை எதிர்நோக்கும் இன்றைய நெருக்கடி நிலைகள், தாக்கங்கள் என்பவற்றிற் சிலவற்றால் குடும்பம் என்பதும் பாதிக்கப்படும். இப் பாதிப்பின் அறிகுறிகள் தென்படுகின்றன என நாம் அறிய வருவது வியப்புக்கு உரியதாகாது" எனக் கூறுகிறார்.

இன்றுள்ள, சமுதாயத்தில் பெற்றோரில் அநேகர் தமது பங்கு என்ன என்பதையிட்டுத் திக்குத் திசை தெரியாது தயங்குகின்றனர். குடும்ப வாழ்க்கையின் மாதிரியமைப்பு மாற்றமுறும் காலம் இது. ஒருவேளை அவர்களது தயக்கத்திற்குக் காரணம் இதுவாக இருக்கலாம். பல நூற்றாண்டுகளாக, குடும்பமானது தன்னடக்கமான ஒரு கூறாகச் செயற்பட்டு வந்தது. பாக சாஸ்திரம் எனப்படும் சமையற் கலையையும் தையற் கலையையும் பெண்பிள்ளைகள் தமது தாய்மாரிடமிருந்து பயின்றனர். ஆண்பிள்ளைகள் பயிரிடல், வேட்டையாடல், வீடு கட்டுதல், வீட்டையும் வீட்டாரையும் பாதுகாத்தல் ஆகியவற்றைத் தமது தகப்பன்மாரிடம் கற்றுக்கொண்டனர். இத்திறன்களுடன்கூட, வாழ்க்கைப் படகு சென்றடைய வேண்டிய குறிக்கோள்களை அமைத்துக்கொள்ளவும் நலந்தீங்குபற்றிய கருத்தேற்பினையும் அவர்கள் பெற்றோரிடமிருந்து அறிந்து மனதலிருத்திக் கொண்டனர்.

ஆனால் இன்றோ, மகன்மார் இல்லத்தில் வாழ, தந்தையர் வெகு தொலைவு சென்று தொழில் பார்க்கின்றனர். அதனால், ஓய்வு கிடைக்கும் ஒரு சில மணித்தியாலங்கள், அல்லது விடுமுறை நாட்களின் போதுதான் ஒருவரையொருவர் கண்டு நெருங்கிப் பழக இவர்களுக்கு வேளை வருகிறது சில தருணங்களில் இவ்விடுமுறைக் காலங்கள் ஓரிரு ஆண்டுகள் கழிந்தும் வருவதுண்டு. தாய்மார்கள், உண்பதற்கேற்ப ஏலவே தயாரான ஊண்பண்டங்களையும், தைத்த ஆடைகளையும் கொள்வனவு செய்கின்றனர். இப்படியாக, காலாதி காலமாக நம் மத்தியிற் பேணப்பட்டுவரும் பிள்ளை வளர்ப்பு முறைகளை இழந்து, புதிய முறைகளை நாம் இன்னமும் எமக்கென வகுத்துக் கொண்டோமில்லை.

இதனால் இன்றைய பெற்றோர், குழந்தை வளர்ப்பையிட்டுத் தமக்கு வாய்த்த பணியை நிறைவேற்றுவது அவர்களது ஆற்றலுக்கு அப்பாற்பட்டது எனக் கொள்ள லாகாது. ஆதலால், பிள்ளை வளர்ப்புப் பணியின்மீது பெற்றோர் தமது காலத்தையும் மதிநுட்பத் திறனையும் இதற்கென வாரி வழங்குதல் வேண்டும் என்பதே இதன் பொருளாகும். முன்பெல்லாம் பிள்ளைகள் வாயிலாக ஒவ்வொரு மனையும் பொருளாதார நலம் பெற்றுவந்தது. அக்காலத்தில், பிள்ளைகளானோர் குடும்ப நலனுக்குத் தாம் முக்கியமானவர்கள் என்பதை அறிந்து உளநிறைவு எய்தினர். இன்றைய பெற்றோர் அத்தகைய உள நிறைவை, திருப்தியை, தங்கள் குழந்தைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்தற்கு, ஆற அமர ஆலோசித்து வழிவகைகளைக் காணல் அத்தியாவசியமாகும்.

சொற்ப காலத்திற்கு முன், "தாயின் முக்கியம்" பற்றி ஆய்வுகள் நடந்தேறின. சமூகவியலாளர்களும், உளவியல அல்லது மனோதத்துவவியல் வல்லுநர்களும் இவ்வாராய்ச்சியின் விளைவுகளையிட்டுப் பக்கம் பக்கமாகக் கட்டுரைகளை எழுதிக் கற்றை கற்றையாக வெளியிட்டனர். தகப்பனாரை ஏறத்தாழ அவர்கள் மறந்தே விட்டார்கள் ஆனால் இப்பொழுதோ, தந்தையின் முக்கியத்துவம் அறிக்கைகளிற் காணப்படுகிறது.

மனோதத்துவவியல் வல்லுநர், ஹென்றி பீ மில்லர் என்பார், உள்ளபடியாக மகனோ, மகளோ, இருபாலாரதும் உளமும், உடலும், பாலியல் வகையில் உரியவாறு வளர்ச்சி அல்லது அபிவிருத்தி அடைதற்கு, தாயிலும் பார்க்கத் தந்தையே பிரதானமானவர் எனச் சுட்டிக்காட்டியுள்ளார் "கர்ப்பம் தரித்துள்ள தாயின் மனம் நல்ல நிலையில் பேணப்படுதற்கு உதவுபவர், தந்தையே. இவ்வாறாக, குழந்தை பிறக்கு முன்பே குழந்தையின்பால் தகப்பனுடைய செல்வாக்கு ஆரம்பமாகின்றது. என்கிறார், அவர். இங்ஙனமாக, தகப்பனுடன் நாளாந்தம் நெருங்கி வாழ வாய்ப்புக் கிட்டாதிருக்குமாயின், முழு வளர்ச்சி அடைந்து விட்டது என வைத்துக் கொள்வோம். அப்பொழுது, அந்த ஆள், ஆணின் பெண்பாலாருடனும், பெண் ஆயின் ஆண்பாலாருடனும், பழகுவதில் சிக்கல்கள், பிரச்சினைகள், எழும் சாத்தியக்கூறுகள் அதிகம்; தகப்பனுடன் அண்மித்து வாழ்ந்த சாதாரண குழந்தைக்கு இத்தகைய பிரச்சினைகள் குறைவாகவே ஏற்படும், என மேலும் விளக்குகிறார், மில்லர்.

நம்மவரிடையே "தந்தையொடு கல்வி போம்" என்பதைச் சற்று நோக்குவோம். போதிய அளவு தகப்பனாரின் ஈடுபாடு இலது, குழந்தையின் பள்ளிக்கூடக் கல்வியின் முன்னேற்றத்திற்குத் தீங்கு விளையலாம். தரம் மூன்றில் கல்வி பயின்ற நாற்பத்து நான்கு மாணவர் மீது மில்லரும் அவரது சகா ஒருவரும் ஓர் ஆய்வு மேற்கொண்டனர். சிலரது தகப்பன்மார் அவர்களுடன் தினசரி மணித்தியாலங்கள் அல்லது அதைவிட அதிக நேரம் கழித்தனர். மேற்கு நாடுகளில், இது அதிகளவில் தந்தை சமூகமாக இருந்தமையைக் குறிக்கும். மறு கோடியில் முழுக்கிழமை

—7-ம் பக்கம் பார்க்க

## ஊர்வலங்கள்

எங்கள் ஊர்
வீதிகளில்
அண்மைக்காலமாய்
நாம் காண்பது
இரண்டு வகை
ஊர்வலங்கள் மாத்திரமே
முதலாவது வகை
இராணுவக் கவச வண்
டிகளின்
உறுமல் ஊர்வலங்கள்
அவை முன்னே போனால்
சில மணி நேரங் கழித்து
சிறு சிறு மரண ஊர்வ
லங்கள்
குச்சொழுங்கை
குறுக்கு வீதி
விழுந்தடித்து
சுடு காடு நோக்கி
மௌனமாய்
விரைந்து போகும்
இது இரண்டாவது வகை
நிச்சயமாய்
எதிர்வரும் நாட்களில்
எங்கள் ஊர்
வீதிகளில்
மூன்றாவது வகை
ஊர்வலமொன்று
போகும்
நம்பலாம்
அது
இந்த இரண்டு வகை
ஊர்வலங்களாய்
இருக்கவே மாட்டாது.

பெனடிக்ற் பாலன்

# ஈழத்து இலக்கிய வழியும் பண்டிதமணியும்

மயிலங்கூடலூர்
பி. நடராசன்

பண்டிதமணி கணபதிப்பிள்ளை என்ற பெயரைக் கேட்டதும் தவமுனிவரான, சைவப் பேரறிஞரான, சைவ சாதனையாளரான மூதறிஞர் ஒருவரின் நினைவும் தோற்றமுமே இன்று பலரது அகக்கண்ணில் தோன்றுகின்றது. நவீன ஆய்வு முறைகளில் ஆழ்ந்து சென்றோர் கூட இவ்விதிக்கு விலக்கு அல்லர். தவமுனி மனக்கோலங்களை நீக்கிவிட்டுப் பண்டிதமணி அவர்களது ஆக்கங்களை முழுமையாக நோக்குவோர் காலத்தோடு வளர்ந்து செல்லும் பல்துறை அறிஞர் ஒருவரைத் தவமுனிவராக வாழும் பண்டிதமணியில் காணமுடியும். தவமுனி மனக்கோலங்களைத் தவிர்க்க உதவும் வகையில் பண்டிதமணி அவர்களின் "அன்பினைந்திணை", "அத்வைத சிந்தனைகள்" ஆகிய இருதுறை நூல்கள் அவர்களது எண்பத்தாறாவது பிறந்த நாட் பரிசாக வெளியிடப்படுவது சாலப் பொருத்தமானதே. இவ்வேளையில் 'ஈழத்து இலக்கிய வழியும் பண்டிதமணியும்' என்ற பொருள் தொடர்பாகச் சிந்திப்பது மகிழ்ச்சி தருவதாகும்.

ஈழத்துக்கெனத் தனியான-தனித்துவமான இலக்கியவழி உண்டா என்ற ஐயம் காலத்துக்குக் காலம் தமிழகத்திலும் ஈழத்திலும் தோன்றுவதுண்டு. இத்தகைய ஐயம் முதன் முதலில் நரசிங்கபுரம் வீராசாமி முதலியாரால்



எழுப்பப்பட்டது. 'யாழ்ப்பாணம் ஒரு சிறு நூலையேனும் ஒரு சிற்றுரையையேனும் செய்குநரில்லாத தேசம்' என்பது வீராசாமி முதலியார் உரைத்த பழி. இப்பழியைத் துடைத்து, "நல்லறிவுச் சுடர் கொளுத்தல்" என்ற பெயரில் ஈழத்து இலக்கியவழி சிறு வெளியீடாக வெளிவர நாவலர் காரணராயிருந்தார். அரசகேசரி முதல் சி. வை. தாமோதரம்பிள்ளை வரை ஈழத்தின் இலக்கியவழி அதில் சட்டகமாகக் காட்டப்பட்டுள்ளது.

வீராசாமி முதலியாரின் வழித்தோன்றலாக உத்தமதானபுரம் வே. சாமிநாதையர் இருபதாம் நூற்றாண்டின் முற்கூற்றில் இவ் ஐயத்தை எழுப்பினார். நாவலரின் வழித்தோன்றலாகப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் இக்காலத்தில் தமிழகத்தாருக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தும் பணியை மேற்கொண்டார்கள். பண்டிதமணி அவர்கள் முதன்மையாகச் சிந்தனையாளரே. எனினும் அவர்கள் சிறந்த ஒப்பியல் ஆய்வாளராகவும் விளங்குகிறார் ஒப்பியல் நெறிநின்ற சிந்தனைச் சிதறல்களே அவர்களது ஈழத்து இலக்கிய வழி தொடர்பான கட்டுரைகள். பண்டிதமணி அவர்கள் இலக்கிய வரலாற்றுப் பாட நூலாசிரியரல்லர். ஈழத்து இலக்கிய வழியின் முக்கிய போக்குகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் ஈழத்து இலக்கிய வழியின் தொன்மையையும் மேன்மையையும் காலத்துக்கேற்ற வளர்ச்சிப் போக்கையும் சுட்டுவதே அவர்களது கட்டுரைகளின் நோக்கம்.

ஈழத்து இலக்கிய வழி தனித்துவமானது எனினும் வெளித்தொடர்புகளற்ற தனிநிலையானதல்ல அது தமிழகத்தோடு வரலாற்றுக் காலம் முதலே இருவழித் தொடர்பு கொண்டது இதனை ஆறுமுகநாவலர் அவர்களைப் போலவே பண்டிதமணி அவர்களும் ஐயந்திரிபுற உணர்ந்திருந்தாகள். ஈழத்துப் பூதன் தேவனாரும் அரசகேசரியும் ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் பொதுவான இலக்கிய மரபுகளைச் சுட்டுபவர்கள் சின்னத்தம்பிப் புலவரும் அவருக்கு முன்பின்னாக வாழ்ந்தவர்களும் தமிழக இலக்கிய மரபுகளை உணர்ந்து கொண்டு தனித்துவமான இலக்கியங்களைப் படைத்தார்கள். நாவலர் காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழக இலக்கிய வழிக்கு ஈழம் பெருமளவுக்குத் தலைமை தாங்கியது- வழிகாட்டியது. இவை யனைத்தையும் பண்டிதமணி அவர்களின் ஈழத்து இலக்கிய வழி பற்றிய கட்டுரைகளில் காணலாம்.

பண்டிதமணி அவர்களின் உயிரோட்டமான இந்தச் சிந்தனையை உணர்ந்து கொண்ட அவரது மாணவர்கள் (1955 இல் இரசிகமணி கனக செந்திநாதன், 1964இல் திரு அ. பஞ்சாட்சரம்) இலக்கியவழி என்ற நூலை வெளியிட்டுள்ளனர். 1955க்கு முன்னர் பண்டிதமணி அவர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 1955இல் வரதர் வெளியீடாகக் கனக. செந்திநாதன் வெளியிட்டார். பின்னர் 1964இல் திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலைப் பழைய மாணவர் சங்க வெளியீடாக இந்நூல் திருத்தப் பதிப்பாக வெளிவந்தது. 1955ஆம் ஆண்டுப் பதிப்பில் இடம்பெற்ற கட்டு

—7-ம் பக்கம் பார்க்க

# போலி நோன்பு

சிவமலர் செல்வத்துரை

சாப்பாட்டு மேசையைச் சுற்றி அமர்ந்திருந்த விடுதி மாணவிகளுக்கு அது இரவுச் சாப்பாடு நேரம். சாப்பிடுவதை விட கதைப்பதில் அவர்கள் அதிக நேரத்தைப் போக்கிக் கொண்டிருந்தனர். ஆனால் ஸ்வர்ணா மட்டும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவில்லை. பகலில் டைப் செய்தது பிழை என்று கம்பனி டைரக்டர் திட்டிய போது வந்த துக்கம் இன்னும் போய் விடவில்லை. ஆனபடியால் அவள் பேசாமல் சாப்பிட்டு வந்து தன் அறையில் கட்டிலில் விழுந்தாள்.

''டிரிங்... டிரிங்'' ஹோலிலிருந்த போன் அலறியது. வேறு யாருமில்லாததால் ஸ்வர்ணா போய் போனை எடுத்தாள்.

''ஹலோ, யார் பேசுறது?'' என்றான் அந்தப் பக்கம் நின்று கொண்டிருந்த பிரகாஷ்.

குரலும் வனிதாவின் குரலும் ஒன்றாயிருந்ததினால் வந்த வினை தான் அது என்பது ஸ்வர்ணாவுக்குப் புரிந்தது. அவள் என்ன பதில் சொல்வதென்று தடுமாறிப் போனாள். ''கொஞ்சம் நில்லுங்க நான் வனிதா இல்லை... வனிதாவைப் பேசுவதற்கு கூப்பிட்டு விடுகிறேன்'' என்று சொல்ல இவள் வாயெடுத்த வேளையில் அந்தப் பக்கம் அவன் போனைக் கீழே வைத்தான் ''டக்'' கென்று...

இந்தப் பக்கம் வனிதா தன் கோரிக்கைக்குச் சரியென்று பதில் சொல்லாததால் வந்த கோபமாக்கும்......


இதற்கிடையில் மற்றவர்களும் சிரித்துக் கதைத்தபடி சாப்பிட்டு முடித்து மேசைக்கு வந்தனர். யாரடி போன் பண்ணினது இந்த இராவிலை?'' என்று வனிதா தான் விசாரித்தாள். ''அது ரோங் நம்பர் கோல்'' என்று சமாளித்தாள்

இவ்வாரக் கதையமுதம்

''நான்...'' என்று தொடங்கும் போதே ''அடடா வனிதா... நீயா போனை எடுத்தாய்? அது சரி நாளைக்கு இரவு நாம் கண்டிக்குப் போகலாம். என்னுடைய ஸ்கூட்டரிலேயே போயிடலாம்; சனி ஞாயிறு அங்கையே தங்கிறத்துக்கு ஏற்பாடு பண்ணியாயிற்று. ஏன் சைலன்ஸ்? உடனேயே சரியெண்டு சொல்லேன்'' ஒரு நிமிஷமும் பொறுமையில்லாமல் அடுக்கிக் கொண்டேயிருந்தான். ஸ்வர்ணாவுக்கு எதுவும் பேசமுடியவில்லை. அவளுடைய

ஸ்வர்ணா: எல்லோரும் தங்கள் தங்கள் படுக்கையறைகளை நாடி நடந்தனர். அவர்களில் எல்லாருமாகப் பன்னிரண்டு பெண்கள் இந்த வீட்டின் நான்கு அறைகளிலே மும்மூன்று பேராகத் தங்கியுள்ளனர். அவர்களுக்கு அங்கே தான் உத்தியோகங்கள். அதனால் தான் அப்படி வந்து தங்கியுள்ளார்கள். உத்தியோகத்துக்குப் போக வந்து சாப்பிட்டு விட்டுக் கூடிப் பேசிச் சிரித்துப் படுக்கைக்குப் போவதோடு அவர்களின்

நாள் முடியும். அவள் எப்போதும் தன் பழைய நாட்களுள் மூழ்கிக் கிடப்பாள். இவளுக்காகத் தோழிகள் தமக்குத் தாமே வருத்தப்படுவார்கள். அவனை நினைத்து வருந்திய கழிவிரக்கம் பெறு



மதியற்றது என்ற எண்ணம் நெஞ்சில் சூடாகப் பரவ ஸ்வர்ணா சிந்தனையுடன் தன்

அறைக்குள் வந்தாள். ஆனந்த விகடன் புத்தகம் மேசையில் கிடந்தது. அதொரு பழைய புத்தகம். அது பொன்விழா மலர். முன்பே படித்த புத்தகம் தான். என்றாலும் மூளையின் சுழற்சியைத் தடுப்பதற்காக அதை எடுத்து அலட்சியமாகப் பிரித்துப் பார்த்தபடி படுக்கையில் போய் விழுந்தாள்; அவளுடைய சிந்தனையைப் பாராமல் கைவிரல்கள் புத்தகத்தைப் பிரித்த போது

பத்தாம் பக்கத்தில் காஞ்சி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் வரதட்சணையின் கொடுமை

பற்றிச் சொல்லிய அந்த வரிகளிருந்தன;

''ஸ்திரீகள் தான் தர்மத்தை வளர்க்கிற தீபங்களாக இருக்கிறவர்கள். அவர்களின் பண்பு கெடுகிறதுக்கு இடம் தரக் கூடாது. அப்புறம் தேசம் பிழைக்காது. ''குல ஸ்திரீகளின் பண்பு கெட்டுப் போய் விட்டதானல் அப்புறம் தர்மமே போயிடும்; தேசமே போயிடும்'' என்று தான் அர்ஜுனன் கூட பகவானிடம் அழுதான். நம் ஸ்திரீ தர்மத்தைக் காப்பாற்றுகிற பெரிய கடமையில் நாம் தவறி விடக் கூடாது. பெண்கள் உரிய காலத்தில் கல்யாணமாகி கிருக லக்ஷ்மிகளாக இருக்க வேண்டியது சமூக ஷேமத்துக்கு ரொம்பவும் அவசியம்'';

வாசித்தபடியே ஸ்வர்ணா கண்ணயர்ந்து போனாள். காலையில் எழுந்த போது ஸ்வர்ணா இரவு நிகழ்ச்சியை மறந்து போனாள். காலையில் எல்லோரும் ஒரே அவதி... மறுபடி காரியாலயங்களுக்குப் புறப்படும்வழியில் கலகலப்பு. கேலிப் பேச்சுக்களும் கிண்டலுமாக...

வனிதா ஏதோ நினைத்தவளாக ''ஒரு போட்டோ பார்க்கப் போறீங்களா? என்று கேட்டாள். தொடர்ந்து தானே அந்தப் புகைப்படத்தை எடுத்து அவர்களிடம் கொடுத்தாள். சுமார் பதினெட்டு வயதுள்ள ஒரு அழகியின் படம் தானது. எல்லாப்பெண்களும் அதிசயத்துடன் பார்த்தார்கள். ''அடியே வனிதா நீ முந்தி மிச்சம் அழகியடி''

என்று ஒரேயடியாகச் சொன்னார்கள்.

''நான் அப்ப நல்ல சிவப்பு நிறம்; அளவான மொத்தம். எனக்கு அப்ப நீண்ட மயிர்...'' அவள் சொன்னாள்;

''அதுதானடி அந்தக் கனகராசா உன்னை முன்னாலும் பின்னாலும் துரத்தினராக்கும்'' என்று ஞானா சொன்னாள். வனிதாவின் கண்களில் சிறிது கண்ணீர் சேர்ந்து விட்டது. அதன் மேல் அந்தக் கதையை வளர்க்க அவர்கள் விரும்பவில்லை.

''இப்ப நீ நல்லா மெலிஞ்சிட்டாய், அதனாலை கன்னச் சதைகள் குறைந்து வட்ட முகம் கோணலாகி விட்டது அதோடை பல்லும் வெளியிலை வந்திட்டுது. கறுத்தும் போயிட்டாய்; மயிரும் கொட்டுப்பட்டு இப்ப நாலைஞ்சு மயிர் தானிருக்கு... இருந்தாலும் இப்பவும் நீ அழகாகத்தானிருக்கிறாய்... ஏனடி உன்னை ஊருக்குள்ளையே கூட்டிக் கொண்டு திரிஞ்சிட்டு வேறொருத்தியைக் கட்டுற துணிவு அந்தாளுக்கிருக்கேக்கை உனக்கு அவனைப்பற்றி நினைக்க ரோஷமில்லையா? என்று ஞானா கோபமாகக் கேட்டாள்.

இதற்கிடையில் பஸ் வந்தது. வனிதா போய் விட்டாள். மற்றவர்களின் கதை வேறு திசையிலே போயிற்று.

மாலையில் காரியாலயங்களிலிருந்து எல்லோரும் வந்து விட்டார்கள். வனிதா மட்டும் வரவில்லை. தனது காரியாலய பியோனிடம் விடுதிச் சொந்தக்காரருக்கு கடிதம் அனுப்பியிருந்தாள்.

''நான் கந்தோர் அலுவலாக கண்டிக்குப் போக வேண்டியிருப்பதால் நாளைக்குத்தான் உவ்விடம் வருவேன்'' என்பது கடிதச் செய்தி.

மறுநாள் இரவு எட்டு மணியளவில் விடுதிக்கு வந்ததும் நேரே போய்க் கட்டிலில் விழுந்து விட்டாள் வனிதா. தோழிகள் எல்லோரும் அவள் பயணக் களைப்பிலிருக்கிறாள் என்று ஒதுங்கி விட்டார்கள்.

மறுநாள் காலையில் எல்லோரும் எழுந்த பின்னும் அவள் எழுந்திருக்கவில்லை. ஸ்வர்ணா உலுக்கி எழுப்பிய போது ''ஐயோ இறகிறகாகப் பிய்த்தெடுத்தாற் போல் உடம்பெல்லாம் ஒரே நோவு.......'' முனகினாள் வனிதா.

ஸ்வர்ணாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. பழைய காதலனை நினைத்து நோன்பிருக்கிறதாகச் சொல்லிக் கொண்டு, இவளேன் இப்படிப் பாதை மாற வேணும்? பேசாமல் ஒழுங்காக ஒரு கல்யாணத்தைச் செய்தால்... ஒருவனோடு ஒழுங்காக வாழ்வதாயிருக்குமே.. எவ்வளவு நிம்மதி; எவ்வளவு சௌரவம்.....என்று ஸ்வர்ணா தனக்குள் நினைத்தாள்.

ஆனால் சொன்னாலும் பிரயோசனமில்லாத அந்தப் புத்திமதியைச் சொல்ல அவள் விரும்பவில்லை.

# ஈரமில்லா இதயங்கள்

கந். தர்மலிங்கம்

''பிள்ளை! பிள்ளை! என்ற குரல் கேட்டு, இரவுச் சாப்பாட்டிற்கான சமையலில் ஈடுபட்டிருந்த ரேவதி வெளியே வந்து பார்த்தாள். ''அப்பு இருங்கோ. அடுப்பிலை பிட்டை வைத்துவிட்டு வாறன்.'' ரேவதி வரும்வரை அந்தக் கிழவன் அங்கேயிருந்த கட்டிலின் உட்கார்ந்து இருந்தபடி எதையோ பறிகொடுத்தவர் போல யோசித்துக் கொண்டிருந்தார்.

''அப்பு, இந்தாங்கோ தேத்தண்ணீர்'' அவள் கொடுத்த தேனீர்க் கோப்பையை இரண்டு கைகளாலும் வாங்கினார் அந்தக் கிழவன். ''அப்பு மகளும் பயணம் போட்டா. நீங்கள்தான் வீட்டில் தனிய இருக்கப் போறியள். மூன்று ஆண்பிள்ளைப் பிள்ளைகள் குடும்பமாக வசதியாக வாழுகினம். அவர்களில் ஒருவரோடு போயிருந்தால் என்ன?

''பிள்ளை, அவர்களுக்கு அப்படியொரு எண்ணமிருந்தால் எனைக் கேட்கமாட்டினமே?'' அவர் வேதனை கலந்த குரலில் சொன்னார்.

''அப்பு, இரவுக்கு என்ன சாப்பாடு?''

''பின்னேரம் போலைதான் சாப்பிட்டனான். இனி கொஞ்சம் தேத்தண்ணியை குடிச்சிட்டு படுக்க வேண்டியதுதான்''.

''அப்பு, நான் பிட்டு அவிச்சுப் போட்டன். கொஞ்சமாய் சாப்பிடுங்கோ'' அவர் எவ்வளவு தூரம் மறுத்தும் அவள் பிடிவாதமாக அவரை சாப்பிட வைத்தாள். கொஞ்ச நேரம் அவளோடை இருந்து கதைத்துவிட்டு அவர் எழுந்து சென்றார்.

அந்தக் கிழவனின் பெயர் கதிர்காமு. அவருடைய வாழ்க்கை வரலாறை ரேவதியின் மனம் புரட்டிப் பார்த்தது. அவர் அந்தக் காலத்தில் பெரிய கமக்காரர். நாற்பது பரப்புக்கு மேல் தோட்டக் காணி இருந்தது. தன்னுடைய ஆண்பிள்ளைகளுக்கும் முதுசமாக காணி கொடுத்தார். பதினைந்து பரப்புத் தோட்டக் காணி. பெரிய வீடு வளவு. இதைவிட நகை, இனம் கொடுத்து ஒரு உத்தியோக மாப்பிள்ளையை மகளுக்கு கட்டிக் கொடுத்தார்.

அவருடைய ஆண்பிள்ளைகள் கிட்ட இருந்தும் அவரைப் பற்றி எண்ணிப்பார்ப்பதில்லை. மகளும் அதேநிலைதான். தகப்பனைப் பற்றி எதுவித கரிசனையுமில்லாமல் கணவனோடு பயணமாகி விட்டாள்.

எத்தனை சொத்துக்களை வைத்திருந்த அந்த மனிதனுக்கு இன்று சாப்பிட வழியில்லை. ஒரு பிச்சைக்காரன் கூட எங்கேயாவது இரந்து பெற்று வயிறாறச் சாப்பிட முடிகிறது.

அவளுடைய மனம் அவரையே எண்ணி குழம்பியது. தன்னுடைய தகப்பன் உயிரோடை இருந்து இப்படியொரு நிலை அவருக்கு ஏற்பட்டால்? பிச்சைக்காரன் பிச்சைக்காரனாக இருப்பது வேதனையல்ல. வசதியாக மூன்று நேரமும் வயிறாறச் சாப்பிட்டவர்கள், சொத்து, பணம் இருந்தும் அதனால் எதுவித பிரயோசனமும் இல்லாமல் அநாதரவாக இருப்பவர்கள் தான் அனுதாபத்துக்குரியவர்கள்.

கதிர்காமுக் கிழவன் பசியோடு படுத்திருப்பதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள், கணவன் தோட்டத்தால் திரும்பி வந்து ஆறுதலாக இருக்கும்போது தன்னுடைய விருப்பத்தை வெளியிட்டாள்.

இஞ்ச பாருங்கோ, கதிர்காமு அப்புவின் மகளும் பயணம் போட்டாள். அவர்தான் வீட்டில் தனிமை. ''அந்தக் கிழவன் எப்படி தன்னுடைய கையால் காய்ச்சித் தின்னும்? அவரை எங்கடை வீட்டில் சாப்பிடக் கேட்கட்டே.''

தருமம், அன்பு இதுதான் வாழ்க்கையில் அர்த்தத்துடன் வாழ வைப்பது என்பதை புரிந்து கொண்ட அவனும் தலையாட்டி சம்மதம் கொடுத்தான்.

## வீ(வி)திகள்..!

வீதிகள் தமிழனின்
விதியைப் போலே
பாதைகளா இவை...?
பெரிய வாதைகள்!
துயரக் காதைகள்!
? ? ? ? ?
நாம் அநாதைகள்!
........................
வீதிகள் திருத்தப்படு
மா...? நமது
விதியே திருத்தப்
படுமா...? ?

● சத்தியசீலன்

# ஹிட்லரின் அந்தரங்கங்களை அறிந்த வஞ்சகக் காவலன்

வன்முறைகளின் வளர்ப்புக் காவலனான அவனது வஞ்சகக் கண்கள், தன்னைச் சூழ்ந்திருந்த தொண்டர் படையினரைத் துழாவின; தூண்டிவிட ஆரம்பித்தன.

'கட்டி வா என்றால் வெட்டி வரும்' அவனது கடமை மிக்க வீரர்கள். அந்தக் கம்யூனிஸ்ட் இளைஞனை அப்படியே தூக்கி கொட்டகைக்கு வெளியே எறிந்தனர். தொடர்ந்து கொட்டகைக்குள் கலவரம் துவங்கியது. கோயபல்ஸ் கும்பல் அங்கு வந்திருந்த இதரக் கம்யூனிஸ்ட்டுக் கட்சிக்காரர்களை நாற்காலிகளாலும், சோடாப் புட்டிகளாலும் நையப்புடைத்தனர். கோயபல்சும், அவனை அண்டிப் பிழைத்த குடி கெடுக்கும் கும்பலும், திட்டமிட்டே செய்த இந்தத் திருவிளையாடல்களை,

## அண்டப்புளுகன் கோயபல்ஸ் | 5

மறுநாளையத் தினசரி ஏடுகளெல்லாம் கடுமையாகக் கண்டித்து எழுதின.

ஒரு நாளிதழ் இவனைக் ''கலகக்காரன்'' (Bandit) என்று குறிப்பிட்டெழுதியது. மறுமுறை ''அரிய கலைஞன்'' என்று தனக்குப் பெயர் வைத்துக்கொண்ட இந்தப் ''பெரிய புளுகன்'' தான் பேச இருந்த கூட்டத்தில், செய்ய இருந்த விளம்பரத்தில் ''கலகக்காரன் கோயபல்ஸ்'' பேசுவார் என்று, தன் பெயரைப் பெரிய எழுத்துக்களில் போடச் சொல்லி, நகரில் ஒரு இடம் பாக்கியில்லாது ஒட்டச் செய்தான். அதுமட்டுமன்றி, அன்று அவன் பேசிய அந்தக் கூட்டத்தில் படுகாயமடைந்திருந்த பலரை, 'ஸ்டெச்' சரில் (Stretcher) வைத்துத் தள்ளிக் கொண்டு வந்து பொது மேடையிலேற்றி மக்களுக்குக் காட்டினான்.

அவர்கள் அனைவரும், கம்யூனிஸ்ட்டுக் காலிகளால் தாக்கப்பட்ட, தாயகமாம் 'திருநாட்டை' மீட்கக் கிளம்பிய தன்மான வீரர்களென்றும் வீராவேசத்தோடு எடுத்துச் சொன்னான். ஆனால் உண்மையில் நடந்தது என்ன தெரியுமோ?

காயப்பட்டவர்களென்று கட்டுப்போட்டு வந்து காட்டப்பட்டவர்களில், யாருக்கும் எந்த அடியும் கிடையாது. அவர்கள் பாவம்! முந்திய நாள் கூட்டம் நடந்த அந்தக் கொட்டகைக்கே செல்லாதவர்கள். பொதுமக்களின் அனுதாபத்தைப் பெறவும், தன் கட்சியிலுள்ளவர்கள் லட்சிய வீரர்கள, தியாகத் தழும்பேற்ற தீரர்கள் என்பதைக் காட்டவுமே, 'ஏய்ப்பன்' கோயபல்ஸ் செய்த ஏமாற்று வித்தையது. ''காயமே இது பொய்யடா'' என்பது அவனுக்கும், அவன் சுழற்றிப் போடும் காலணிகளைப் போடச் சொன்ன இடத்தில் (!) போடக் காத்திருந்த கர்ம வீரர்களுக்கும் மட்டுமே தெரிந்த உண்மை.

பச்சைப் பொய், பயங்கரப் பித்தலாட்டம், வார்த்தெடுத்த வஞ்சகம், வடிகட்டிய ஏமாற்று, துணிந்து செய்த பலாத்காரம் இவைகளின் மூலமே; கட்சியில் அவன் தனக்குச் செல்வாக்கைத் தேடிக் கொண்டான் என்பது அவனது வரலாற்றில் எந்தப் பக்கத்திலும் காணக் கிடைக்கும் உண்மைகளாகும்.

1930-ம் வருடம் பிப்ரவரி மாதம் ஒருநாள்; விபச்சாரத்தைத் தொழிலாகக் கொண்ட விலைமாதர்க்கு ஆள்பிடித்து விடும் தரகர்களான இருவருக்கிடையே ஏற்பட்ட சொந்தத் தகராறு, ஒரு கொலையில் வந்து முடிந்தது அந்த அருவருப்பான கொலையை, மிகப் பெரிய அரசியல் நிகழ்ச்சியாக்கி, அதற்குக் கட்சியின் லட்சிய முத்திரை குத்தி, உறுப்பினர்களைத் திரட்டி, ஊர்வலம் நடத்தி, ஆரவாரமான சடங்குகள் செய்து, அதை நாசிக் கட்சியின் சரித்திரத்தில் மறையாத எழுத்துக்களால் பொறித்து வைத்த கோயபல்சின் ராஜதந்திரம், அரசியல் நரிகளே கண்டு அயர்ந்து போகும் ஒரு சம்பவமாகும்.



ஹிட்லர்

ஹாரஸ்ட் வெஸல் (Horst wessel) என்பவன், கோயபல்சின் நாசிக் கட்சி உறுப்பினர்களில் ஒருவன். இவனது நிரந்தரத் தொழிலே கூட்டிக் கொடுப்பது தான் (Pimp) விலைமகள் ஒருத்தியின் வீட்டிலேயே இவன் தங்கியிருந்தான். வீதிகளில் விண்வப்பு செய்து (Stree Fighter)



கோயபல்ஸ்

கலவரம் விளைவிப்பதே இவனது 'ஓய்வு' நேர வேலை. அபாயமான பகுதி (Redlight Area) யென்று அங்கே அழைக்கப்பட்ட, 'இன்ப விருந்தளிக்கும் எழிலரசிகள்' நிறைந்த அந்தத் தெருவில், இந்த ஹாரஸ்ட் வெஸலின் தொழிலைச் செய்துவரும் இன்னொரு தரகன் இருந்தான். அவன் பெயர் அலி ஹோலர், (Ali Hoehler) என்பதாகும். இவர்கள் இருவருக்கிடையே ''தொழில்'' சம்பந்தமாக ஏற்பட்ட சண்டையில், அலி ஹோலர், ஹாரஸ்ட் வெஸலை ஆளையே தீர்த்துக் கட்டிவிட்டான். அரசினர் அவனைப் பிடித்து, பின்னால் மரண தண்டனையும் அளித்தனர்.

தனது கட்சி உறுப்பினனான ஹாரஸ்ட் வெஸல கொலை செய்யப்பட்டதைக் கேட்டதும், அங்கே பறந்து சென்றான் கோயபல்ஸ் கொடிகளை ஏந்திய ஆயிரக் கணக்கான தொண்டர்களைக் கூட்டினான். நகரமே அனுதாபப்படும் வகையில் மாபெரும் துக்க ஊர்வலம் ஒன்றையும் நடத்தினான். கல்லறையில்— கட்சிக்காக (!)ச் செந்நீர்த் துளிகளைச் சிந்திச் செத்த அந்தத் தியாக வீரனின் சோக வரலாற்றைச் சொல்லி, இவனும் இயன்ற அளவு கண்ணீர்த் துளிகளைச் சிந்தினான். அதோடு விட்டானா? கோயபல்ஸ்தானே நடத்தி வந்த தனது பத்திரிகையான 'போர்ப்பரணி' யில் (Der Angrief) மறைந்து போன அந்த மாவீரனைப் பற்றி, 'வசன கவிதை' ஒன்றும் எழுதி வெளியிட்டான். கூட்டிக் கொடுத்த 'தரக'னின் மீது கோயபல்ஸ் பாடிய அந்தப் பாடல்தான், நாசிக் கட்சி, நாசமடைந்து போகும்வரை, அதன் லட்சிய (Nazianthem) கீதமாக இருந்த தென்பதை யாரும் மறந்து விடவேண்டாம்.

இப்படிப் பல விரும்பத்தகாத செயல்களைச் செய்து, கட்சியின் மீது பொதுமக்கள் வெறுப்படையும்படிக் கோயபல்ஸ் நடக்கிறானென்பதை மியூனிக் (Munich) நகரிலிருந்த ஹிட்லர் அறிந்து, இவனைக் கண்டித்தான். இதைக்கேட்டதும், இவன் ஹிட்லரிடமே தான் கட்சியிலிருந்து விலகி விடுவதாகப் 'பூச்சாண்டி' காட்டினான். இந்த 'மனமுறிவு' ஹிட்லருக்கும் இவனுக்குமிடையே சில மாதங்கள் வரை நீடித்திருந்தது. இந்தச் சமயங்களில் 'அரசியல் ஆலோசனை' களைக்கூட இவர்கள் மூன்றாவது மனிதரை இடையில் வைத்தே பரிமாறிக் கொண்டனர்.

### 'தி' எழுதுவது

ஹிட்லரோ, இவனைக் கடுமையாகக் கண்டிக்கவோ, கட்சியிலிருந்தும் நீக்கவோ முடியாத நிலையிலிருந்தான். காரணம், வெளியில் தெரியக் கூடாத சில சொந்த அந்தரங்கங்கள் இவர்களிடையே தொடர்ந்து நடந்து வந்தன. (அதைப் பின்னால் விபரிக்கலாம்) ஆனாலும், யார் யாரை எப்படியெப்படி அணைத்தும், இழுத்தும் செல்வதென்ற

—6-ம் பக்கம் பார்க்க

## நல்லவர்; வல்லவர்!

குவாஜா ஹஸன் என்று ஒரு பெரிய துறவி இருந்தார். ஒருமுறை அவர் ஆற்றங்கரையில் உலாவிக் கொண்டு இருந்தார்.

அங்கே ஒரு காட்டுமிராண்டி உட்கார்ந்திருந்தான். அவன் எதிரே மதுக் கலயங்கள் போல் சில இருந்தன, அருகே ஒரு மாதும் அமர்ந்திருந்தாள்.

'இவனைக் காட்டிலும் நான் எவ்வளவோ நல்லவன். நான் மது அருந்துவதில்லை. வேறு தீய பழக்கங்களும் எனக்குக் கிடையாது.' என்று எண்ணினார் ஹஸன்.

அப்பொழுது ஆற்றில் மிதந்து வந்த படகு திடீரெனக் கவிழ்ந்து விட்டது. அதில் இருந்த ஏழு பேர்களும் தண்ணீரில் விழுந்து தத்தளிக்கலானார்கள்.

காட்டுமிராண்டி நீரில் பாய்ந்து ஒவ்வொருவராக ஆறு பேரைக் கரை சேர்த்தான். பிறகு ஹஸனைப் பார்த்து, ''இந்த ஏழாவது ஆளையாவது நீங்கள் காப்பாற்றுங்கள்!'' என்றான்.

ஹஸன் விழித்தார்.

''என்னைவிட நீங்கள் நல்லவர் என்பதாக உங்களுக்கு ஓர் இறுமாப்பு. நீங்கள் மது அருந்துவதில்லை, வேறு தீய பழக்கங்களும் உங்களுக்கு இல்லை - இல்லையா?'' என்று கேட்டான் காட்டுமிராண்டி.

ஹஸனுக்கு வியர்த்து விறுவிறுத்தது.

''இந்தக் கலயங்களில் இருப்பது கங்கை நீர். அருகில் இருப்பவர் என் தாயார்'' என்று அவன் மேலும் கூறவே, ஹஸன் வெட்கத்தினால் கூனிக் குறுகி விட்டார்.

அன்று முதல் பிறர் குற்றங் கண்டு தம்மை உயர்ந்தவராக எண்ணுவதை அவர் அறவே விட்டுவிட்டார்.

தொகுப்பு - க. கனகராசா ச. நீ.
ஆதாரம் - மஞ்சரி.

## கல்யாணமாம் கல்யாணம்

அன்று நானும் சித்தியும் அவசியம் செல்ல வேண்டிய திருமண வைபவம் ஒன்றிற்குப் புறப்பட்டோம். இது ஒரு ''ஒபின் திருமணம்''. தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை; செல்ல வேண்டியவர்கள் அனைவரும் அவசியம் செல்ல வேண்டும். (மற்றவர்களும் விரும்பின் செல்லலாம்.) திருமண வைபவம் பெண் வீட்டில் மிக விமரிசையாக நடைபெற்றது. அதாவது சோடனைகள் என்ன? நாதஸ்வரக் கச்சேரி என்ன? ஒளி விளக்குகள் என்ன? ஈடு செய்ய முடியாமல் இருந்தன.

நாங்களும் முன் வாசலை அடைந்தோம். வாசலின் இரு மருங்கிலும் பெண்ணின் அண்ணன்மார் இருவர் துவார பாலகர்கள் போல் அமர்ந்து இருந்தனர். இவர்கள் புது மணப் பெண்போல் குனிந்த படி, திருமணத்திற்கு வருவது உங்கள் கடமை ஆனால் வரவேற்பது எங்கள் கடமையில்லை எனும் பாவனையில் அமர்ந்திருந்தனர். வைபவத்திற்கு வருவோர் எல்லோரும் படத்திற்கு ரிக்கற் வேண்டச் செல்வோர் போல் அவசர அவசரமாக வீட்டு வாசலை நோக்கிச் சென்றனர். வீட்டு வாசலில் நிறைகுடம், குத்து விளக்கு, சந்தனம், பன்னீர் யாவும் ஒரு சிறு மேசையில் வைக்கப்பட்டிருந்தன. அதற்கு முன்னால் எதிரும் புதிருமாகப் பெண்ணின் மைத்துனர் இருவர் பசுக்கிய பிள்ளைகளாக அமர்ந்திருந்தனர். நாங்களும் ஏனையோருடன் வீட்டினுள் நுழைந்து அமைந்திருந்த மணப்பந்தலில் அமர்ந்தோம். நான் இரகசியமாகச் சித்தியிடம் ''என்ன சித்தி! சினிமாத் தியேட்டருக்குள் நுழைந்த மாதிரி நுழைகின்றோம். ஒருவரும் வருவோரை உபசரிக்கவில்லை'' என்றதும் சித்தி ''நீ பேசாமல் இரு. தற்காலத் திருமணங்கள் எல்லாம் இப்படித்தான்,'' என்று என் வாயை அடக்கினார்.

### நீரஜா

திருமண வைபவமும் ஆரம்பமாகியது. ஆனால் வைபவத்திற்கு வந்தவர்கள் எவரும் வைபவத்தினைப் பார்க்க முடியாமல் மணவறைக்கு முன்னால் திரை போட்டது போல் டிவி படப்பிடிப்பாளரும், சாதாரண படப்பிடிப்பாளரும், அவர்கட்கு உதவுவோர் கட்டளை இடுவோர் எனப்படும் பலரும் நின்றனர். பெண்ணையும் பிள்ளையையும் ஒருதரம் கண்குளிரப் பார்க்க முடியவில்லையே என்ற அங்கலாய்ப்பு எனக்கு. மற்றப் பெண்களைத் திரும்பிப் பார்த்தேன். அவர்கள் இப்பொழுது விட்டால் பின் கிடையாது என்ற தோரணையில் கூட்டம் கூட்டமாக இருந்து வம்பளந்து கொண்டிருந்தனர். என்னால் பொறுமையாக இருக்க முடியவில்லை. நான் சித்தியிடம் ''நாங்கள் திருமணத்திற்கு வராமல் பின் வீடியோவைப் போட்டுப் பார்த்திருக்கலாம், சித்தி'', என்றேன். சித்தி மறுபடியும் ''பேசாமல் இரு இது தான் மொடேர்ன் (நவீன) திருமணம் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று அடக்கினார்.

சிறிது நேரத்தில் மணவிழாவும் முடிந்து அறுகரிசி போடத் தொடங்கினர். அச்சமயம் ஒருவர் ஓடி வந்து, ''அன்பளிப்பு கொடுப்போர் இப்பொழுதே கொடுங்கள்; அனையும் வீடியோவில் எடுக்கப் போகின்றோம்'' என்றார். இதனைக் கேட்டதும் ஒரு சிலர் அங்கு நின்ற சைக்கிள்களை எடுத்துக் கொண்டு சமீபத்தில் உள்ள கடைக்கு விரைந்தனர். ஏன் தெரியுமா? ஒரு ''மினி அலபம்'' ஆதல் வேண்டிக் கொண்டு வந்து கொடுத்துத் தாங்களும் வீடியோப் படத்தில் இடம் பெறுவதற்காக.

தொடர்ந்து சபை இருத்தும் படலம் ஆரம்பமாகி உணவும் பரிமாறப்பட்டது. ஆனால் உணவு உண்ணுமாறு அழைக்காமலேயே எல்லாவற்றிற்கும் போட்டி போடும் ஒரு சிலர் தாமாகவே சென்று முதற் பந்தியில் அமர்ந்தனர் பலர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்

—7-ம் பக்கம் பார்க்க

# மரணதண்டனையா?

## இது அமெரிக்காவில் முன்பக்கச் செய்தியல்ல

1984ஆம் ஆண்டு முழுவதும் மரண தண்டனை பற்றிய சர்ச்சை அமெரிக்க ஐக்கிய அரசுகள் அடங்கிலும் பரவியிருந்தது. ஆயினும் அவ்வருடம் நிறைவேறிய மரண தண்டனைகளின் எண்ணிக்கை ஓர் உச்சக் கட்டத்தை எட்டிப் பிடித்தது. அப்பன்னிரண்டு மாதங்களிலும் இருபது பேர் மரண தண்டனைக்கு ஆளாகினர். கடந்த இருபது ஆண்டுகளில், அதாவது 1963 தொட்டு, இவ்வளவு அதிகமானவர்கள் இத்தண்டனை பெற்றதில்லை.

அமெரிக்க சுப்ரீம் நீதிமன்றம், பத்தாண்டு ஒத்திவைப்பின் பின்னர், மரண தண்டனைக்கு அதிகாரம் வழங்கிற்று. அதனைத் தொடர்ந்து முப்பத்தொன்பது அரசுகள், அதாவது அமெரிக்க மாநிலங்கள், மரண தண்டனைகளை நிறைவேற்ற ஆரம்பிக்கத் தலைப்பட்டன.

இவ்வரிசையில் முதலாவதாக இடம் பெற்றவன் கேறி கில்மோர். நீதாசனத் தீர்ப்பிற்கு இணங்க இவனது தண்டனை துப்பாக்கிப் பிரயோகத்தின் வாயிலாக, 1978இல் உட்டா எனும் அமெரிக்க மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டது. அதுமுதற்கொண்டு, ஏழு ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட முப்பது மரண தண்டனைகளில், பெரும்பாலானவை 1984ல் நிறைவேறியவைகள் ஆகும்.

மரண தண்டனை எதிர்வாதம் கூறுவது யாது? தற்பொழுது 1,400 மரண தண்டனைக் கைதிகள் சிறைக் கூண்டில் உள்ளார்கள். அதனைப் பார்த்தால், 1985இல் இவ்விகிதம், மேலும் அதிகரிக்கும் எனத் தோன்றுகிறது. இவ்வாண்டில், சராசரி ஒரு கிழமைக்கு ஒரு மரண தண்டனை நிறைவேற்றப்படும் என இவ்வெதிர்வாதிகளிற் பலர் நம்புகின்றனர்.

அமெரிக்கன் சிவில் லிபெட்டீஸ் யூனியன் எனப்படும் அமெரிக்க குடியியல் சுதந்திரங்களுக்காகப் போராடும் ஒன்றிய தாபனத்தின் தலைவர், ஹென்றி ஷ்வார்ஸ் சைல்ட் என்பவர்: "சாத்தண்டனைச் சடல வண்டில்கள் உருண்டோடுவதைப் பாருங்கள். அடுத்த ஆண்டில் சுமார் அறுபது மரண தண்டனைகள் நிறைவேறும் போல் தெரிகிறது" என ஹேஸ்யம் கூறுகிறார்.

சில காலமாக மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவது சர்வசாதாரண சம்பவமாகி விட்டது. விதிவிலக்குகள் சில தவிர, பொதுவாக அவை நிறைவேறுவது இந்நாட்களில் முதற் பக்கப் புதினமாவது கிடையாது.

உதாரணமாக நஞ்சூட்டும் பார்ஃபீல்ட் பாட்டி விவகாரம் தலைப்புச் செய்தி ஆயிற்று. ஏன் என்றால், அதற்கு முந்திய இருபது வருடங்களின் பின் ஒரு பெண்மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது இதுவே முதற் தடவை ஆகும். இதே போல, முப்பத்தொன்பது வயதினரான அல்ஃபா ஒட்டிஸ் ஸ்ரீஃபென்ஸ் என்ற பெயருடைய மரண தண்டனைக் கைதியும் தலைப்புச் செய்தி அந்தஸ்து பெற்றார். ஜோர்ஜியா மாநில ஜெக்ஸன் சிறைச்சாலையில் வைத்து இத்தண்டனை நிறைவேறும் வகையில் நாற்காலியில் இருத்தி இரண்டாயிரம் வோல்ட் மின்தாக்கத்திற்கு இவர் ஆளாக்கப் பட்டார். ஆனால் முதன்முறை, இவர் இறக்கவில்லை; உயிர் பிழைத்தார்.

மரண தண்டனை தொடர்பான கருத்துக்கணிப்பு ஒன்றின் வாயிலாக அண்மையில் அமெரிக்கா அடங்கிலும் ஒரு கணிப்பாய்வு நிகழ்த்தப் பெற்றது. இதன்போது நூற்றுக்கு எழுபத்திரண்டு சத விகிதமான அமெரிக்கர்கள் மரண தண்டனை முறையை ஆதரித்தனர். 1983 இல் இருநூற்றைம்பது மரணத் தீர்ப்புகள் வழங்கப்பட்டன.

டஃவ்ற்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹியூகோ அடெம் பெடோ, மரண தண்டனையையிட்டு ஒரு நூலை ஆக்கியுள்ளார். அதன் கண், "மரண தண்டனையானது ஒரு நாட்டினது மனோ நிலையின் அதீத சின்னமாகும். அதனை, குறுகிய ஃபியூஸ் வாய்ந்த அதிகாரம் எனலாம்." என அவர் கச்சிதமாக வருணித்துள்ளார்.

அண்மையில் இதுபற்றி ஓர் அறிக்கை வெளியாயிற்று. ஃபுளொறிடா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த குற்றவியல் அறிஞர்கள் பதினொருவர், கூட்டாக இவ்வறிக்கையைத் தயாரித்திருந்தனர். மனிதக் கொலைகள் குறைவுக்கும் அண்மையில்

—7-ம் பக்கம் பார்க்க

### ஹிட்லரின்....

—5-ம் பக்கத் தொடர்

பழக்கத்தை ஹிட்லர் நன்கு அறிந்து வைத்திருந்தான்.

இந்நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, ஹிட்லர் இவனை மியூனிக் நகரத்திற்கு அழைத்து, பெரிய சிறப்புக் கூட்டமொன்றிற்கு ஏற்பாடு செய்து, அதில் 'கொள்கை வீரன்' கோயபல்சை வானளாவப் புகழ்ந்து பாராட்டினான். தன்னை யார் புகழ்ந்தாலுமே மயங்குகிற மனம் படைத்த கோயபல்சுக்கு ஹிட்லரின் புகழ்ச்சி 'உச்சந்தலையில்' வைத்தது போன்ற உணர்ச்சியைக் கொடுத்தது. பிறகு இவன், "இவரே என் ஏக எஜமானன்" என்று எழுதியே வைத்தான்.

கட்சியில், இவனோடு இருந்த இவனுக்குச் சம அந்தஸ்தும் புகழும் வாய்ந்த ஏனைய தலைவர்களையெல்லாம் இவன் வெறுத்தான். அலட்சியம் செய்தான், தீர்த்துக் கட்டுவதற்குரிய வேலைகளையும் திறம்படச் செய்து வந்தான். ஆனால், தனது நாட் குறிப்பில் கூட, ஹிட்லரை மட்டும் தான்வெகுவாக மதித்ததாகவும், அவன் போற்றப் படவேண்டிய, புகழப்பட வேண்டிய தனது ஒரே தலைவனென்றும் எழுதியிருக்கிறான். இவனைப்பற்றி எழுதுகிற அமெரிக்க ஆசிரியர், இவனுக்கு ஹிட்லர் மீது ஏன் இவ்வளவு 'காதல்' பிறந்ததென்பதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடுகிறார். ஒன்று, இவன் நாசிக் கட்சியில் சேரும் பொழுதே, ஹிட்லருக்கிருந்த சிறப்பும், செல்வமும் அதிகம். கோயபல்சின் முதல் 'பாசம்' ஹிட்லரின் 'பணப்பை' மீதுதான் விழுந்ததாம். அடுத்து, ஹிட்லரிடம் இவன் 'நல்ல பிள்ளை'யாக நடந்து கொண்டால்தான், மற்றவர்களுக்குக் கிடைக்காத பதவியும், சலுகையும் தனக்கே கிடைக்கும் என்பதினால் தான். ஹிட்லரிடம் இப்படிச் சலுகையைப் பெற, கோயபல்ஸ் தனது சொந்த... (இது பின்னால் பார்க்க வேண்டிய விஷயம்)

(தொடரும்)

# ஐம்பதுகளில் எழுதத் தொடங்கிய அப்பச்சி மகாலிங்கம்

## மதியும் பிறையும்

1955 ஆம் 56 ஆம் ஆண்டுகளில் மஹரகமை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே அப்பச்சி மகாலிங்கத்தின் கதைகள் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்தன. 'சுதந்திரன் இலக்கியப் பண்ணையில் வளர்ந்தவன் யான்' என்று கூறிக் கொள்ளும் இந்த எழுத்தாளரை 1955இல் முதன் முதலில் சந்தித்தேன். இதே காலப்பகுதியிலே யானும் மஹரகமையில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தேன். நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாடுடைய இவர் இலங்கை வானொலியில் 'சானா'வின் தயாரிப்பான பல நாடகங்களிலும் நடித்துக் கொண்டிருந்தார். கல்லூரி தமிழ் நாடக மன்றத்தின் தலைவராகவும் இவர் திகழ்ந்தார்.

### வேடிக்கைப் பாடல்கள்

ஆசிரிய நண்பர்கள் குதூகலமாக உரையாடிக்கொண்டிருக்கும் போது வேடிக்கைப் பாடல்கள் சிலவற்றை இயற்றிக் கூறுவார் அப்பச்சி மகாலிங்கம். ஒருமுறை இப்படிப் பாடல் இயற்றியதற்குப் பரிசிலாக ஆசிரிய நண்பரான சிவஞானம் அவர்கள் (தற்போதைய வவுனியா மகாவித்தியாலய அதிபர்) ஒரு சீப்புக் கதலி வாழைப்பழத்தைக் கொடுத்தார். மகாலிங்கம் அவர்கள் கவிதையில் பதில் கொடுத்தார்.

பாட்டுகள் படித்ததற்குப்
பரிசிலாய் எமக்கு நீரும்
வீட்டினில் இருந்து வந்த
விலையிலாக் கதலிதன்னை

எனப் பாடலின் இரண்டு அடிகளைப் பாடிவிட்டு என்னைப் பார்த்தார் நானும்:

ஊட்டினீர் எமக்கு எங்கள்
உள்ளமும் குளிர்ந்ததையா
நாட்டினில் உம்மைப்போல
நாலுபேர் இருந்தால்
என்னே

என்று பாடலின் இறுதி இரண்டு அடிகளையும் பூர்த்தி செய்தேன்.

ஒரு ஆசிரிய மாணவர் விரிவுரையாளர் ஒருவருடன் அளவுக்கு மீறி நெருங்கிப் பழகத் தொடங்கினார். இவர் விரிவுரையாளருக்கு வால் பிடிக்கிறார் என்று சக ஆசிரிய மாணவர்கள் பேசிக்கொண்டார்கள். சில நாட்களின் பின் அவ்விரிவுரையாளர் சுயமொழி அலுவலகத்திற்குப் பதவி உயர்வு பெற்றுப் போய்விட்டார். வால்பிடித்தவரின் கூற்றாகப் பாடல் ஒன்று பிறந்தது:

உந்தனின் வாலை நானும்
உறுதியாய்ப் பிடித்து நின்று
மந்திபோல் இளித்த
போதும்
மனத்தினில் இரக்கமின்றி

என நான் தொடங்கி வைத்தேன். அப்பச்சி மகாலிங்கம் அவர்கள் மிகுதியைப் பூர்த்தி செய்தார்கள்:

சுந்தர வடிவா நீயும்
சுயமொழி ஆபீஸ் சென்றாய்
பந்தமும் நூர்ந்து போச்சே
பாவி நான் என்னசெய்வேன்

யாழ்ப்பாணத்தில் நவாலி என்னும் கிராமம் இலக்கியத்திற்குப் பெயர் பெற்றது. இங்கேதான் தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் அவரின் புதல்வர்களான நவாலியூர் சோ. நடராசாவும், பண்டிதர் சோ. இளமுருகனாரும் தோன்றித் தமிழ் வளர்த்தவர்கள். 'தமிழ் முரசு' சஞ்சிகையின் ஆசிரியர் நவாலியூர் நடேசனும் இக்கிராமத்தைச்சேர்ந்தவர்தான். இதே கிராமத்தில் அப்பச்சி ஆசிரியரின் மகனாகப் பிறந்தவர்தான் எழுத்தாளர் மகாலிங்கம். ஆரம்ப காலத்தில் ஏ மகாலிங்கம் என்னும் பெயரில் எழுதியவர் பின்னர் தன் தந்தையாரின் பெயரையும் சேர்த்து அப்பச்சி மகாலிங்கம் என்னும் பெயரில் எழுதி வருகின்றார். சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், நகைச்சுவைக் கட்டுரை ஆகிய பல்வேறு துறைகளிலும் தனது கைவண்ணத்தைக் காட்டியுள்ளார்.

விடத்தல்தீவு மகாவித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி ஆகியவற்றில் பல்லாண்டுகளாகப் பணிபுரிந்த இவர் தற்போது ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

### நாடக எழுத்தும் தயாரிப்பும்

தொடர்ந்து இலங்கை வானொலிக்கு நாடகப் பிரதிகளைத் தயாரித்தும் நடித்தும் வந்த இவர் பொதுமேடைகளுக்கும் பாடசாலைகளுக்கும் பல வரலாற்று, இலக்கிய சமூக நாடகங்களை எழுதியுள்ளார். உத்தமன் பரதன் அடிமையோலை, காசியப்பன்,

(முல்லைமணி)

நீதிக் கொருவன் என்பவை இவர் எழுதித் தயாரித்த வரலாற்று இலக்கிய நாடகங்களாகும். 'பெட்டிசம் போடுவேன்', 'இரவில் முல்லைத்தீவு' ஆகியவை இவரது நகைச்சுவை நாடகங்களாகும்.

யான் எழுதிய பண்டார வன்னியன், வரப்பிரசாதம் முதலிய நாடகங்களையும் வெற்றிகரமாகத் தயாரித்த பெருமை இவரையே சாரும். நாடகப் பிரதி எழுதுதல், நெறியாள்கை, தயாரிப்பு, ஒப்பனை, மேடையமைப்பு அத்தனை துறைகளிலும் அவர் தேர்ச்சி பெற்றிருக்கின்றார். கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் சீடனாக அவரின் நாடகக் குழுவில் சில காலம் அங்கம் வகித்த அனுபவம் இவருக்கு உண்டு.

1965இல் இவரது 'நீதிக் கொருவன்' நாடகக் கையெழுத்துப் பிரதிக்கு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாம் பரிசு கிடைத்தது. தமிழ் மன்னன் எல்லாளனின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து இரண்டு மணி நேர நாடகமாக ஆக்கியுள்ளார் இவர்.

### புனைகதை, கவிதை

ஆரம்ப காலத்தில் இவரது கவிதைகள் சில பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன. பின்னர் இத்துறையை விடுத்து சிறுகதை எழுதுவதில் அதிக ஈடுபாடு காட்டினார். சுதந்திரன், ஈழநாடு, தினகரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் வெளியாகியுள்ளன. ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதிய போதும் இவரது சிறுகதைத் தொகுதி ஒன்று கூட வெளிவரவில்லை. இவரது சிறுகதைகள் சில தமிழகச் சஞ்சிகையான கலைமகளில் வெளியாகியுள்ளன. ஈழநாடு பத்தாவது ஆண்டு நிறைவுப் போட்டியில் இவர் எழுதிய சிறுகதைக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. சிரித்திரன் சிறுகதைப் போட்டியில் இவரது 'யாரோ ஒரு புண்ணியவதி' என்னும் சிறுகதை பரிசில் பெற்றது.

இவரது 'கமலினி' என்னும் நாவல் 1977 இல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்துள்ளது. உன்னதமான பாத்திரங்களை யதார்த்தநிலையில் படைத்து விறுவிறுப்பான கதையோட்டமும் உணர்ச்சியான சம்பவங்களும் கொண்டதாக இந்நாவலை உருவாக்கியுள்ளார். படித்து முடித்த பின்பும் பல நாட்களுக்கு இந்நாவலில் இடம் பெறும் பாத்திரங்கள் வாசகர் நினைவில் நிற்கும். இந்நாவலின் முன்னுரையில் அதன் ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்: "நவாலியில் கடல் தொழிலாளர் மத்தியில் யான் வாழ்கின்றேன். காற்றையும் கடலையும், விதியையும் ஒவ்வொரு நாளும் சந்தித்துப் பதில் சொல்லிவிட்டு வருகின்ற ஒரு தொழிலை அவர்கள் செய்கிறார்கள். அவர்கள் வாழ்வின் ஆழங்கள் அகலங்கள், வேதனைகள், களிப்புக்கள் ஆகியவற்றைப் பின்னணியில் வைத்து இந்நாவலை உருவாக்கினேன்,

### கதைப் பண்பு:

அப்பச்சி மகாலிங்கம் அவர்களின் கதைகள் எதை எடுத்தாலும் ஒரே மூச்சில் படித்துவிட வேண்டும் என்று தோன்றும். ஆவலை தூண்டக் கூடிய முறையில் கதையோட்டம் தங்கு தடையின்றி இருக்கும். சரளமான தமிழ் நடை,

—7-ம் பக்கம் பார்க்க

## ஈழத்து இலக்கிய....

—3-ம் பக்கத் தொடர்

ரைகளே பெரும்பாலும் இப் பதிப்பிலும் இடம் பெற்றன.

இவ்விரு பதிப்புகளிலும் சோமசுந்தரப்புலவர் மறைந்த சிலநாள்களுக்குப் பின் (1953 இல்) எழுதப்பட்ட ''ஈழநாட்டுப் புலவர்'' என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரை அரசகேசரி முதல் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் வரையுள்ள ஈழத்துக் கவிஞர் வழியைச் சுட்டுகிறது. இக் கவிஞர்களின் புலமையை ஈழத்துஇலக்கிய வழியின் பல்வேறு கிளைவழியில் பாயவிடவே பண்டிதமணி அவர்கள் விரும்புகிறார்கள். அரசகேசரியையும் விபுலானந்த அடிகளாரையும் ஒரே வழியில் செல்லவிடலாமா? 'சுவாமி விபுலானந்தர் கவித்துவம் வாய்ந்த இனிய புலவரேயாயினும் அவருடைய விசேட ஆற்றல்கள் பற்றி அவருக்கு வேறு இடங் கொடுக்க வேண்டும்'' என்கிறார் பண்டிதமணி அவர்கள். இது சிலரை ஒதுக்கும் பகைமைப் போக்கல்ல; பேராற்றின் கிளை வழிகளை இனங் கண்டு வரையறுக்கும் போக்கு. பண்டிதமணி அவர்களின் மீயுயர் இலக்கிய வரலாற்றுக் கோட்பாட்டினைவை விளக்க இது சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பண்டிதமணி அவர்கள் உருவாக்கிய இலக்கிய வரலாற்றுப் பேராறு நவாலியூர் சோமசுந்தரப் புலவருடன் சிறுகுட்டையாகத் தேங்கித் தேய்ந்துவிடவில்லை. நவீன தமிழ்க் கவிதையின் தந்தை என்று போற்றப்படும் பாரதியாருக்கு அவரது இலக்கிய வழியில் இடமுண்டு. (1964, பக். XVII) நவீன ஈழத்துத் தமிழ்க் கவிதையின் தந்தை என்று கொள்ளப்படும் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்களுக்குப் பண்டிதமணி அவர்களது இலக்கிய வழியில் இடமுண்டு (சிந்தனைச் சோலை. 1960 மதிப்புரை. பக்IV-VII). பட்டி மன்றங்களிலே பண்டிதமணி அவர்களது எதிரணியிலே நின்று காரசாரமாகப் பேசிய— எழுதிய— வித்துவான் க. வேந்தனுருக்கு அவரது இலக்கிய வழியில் இடமுண்டு (கவிதைப்பூம் பொழில். 1964 அணிந்துரை). வித்துவான் வேந்தனரைச் சோமசுந்தரப் புலவரின் வாரிசாக்கி ஈழத்துக் கவிதை வழியின் அறுத் தொடர்ச்சியைக் காட்டுகிறார் பண்டிதமணி அவர்கள்.

பண்டிதமணி அவர்களது அறிவுலகப் பணிக் காலத்தை நான்கு கட்டங்களாக வகுக்கலாம்:

1. கல்வி பயின்ற காலம்
2. பிறருக்கு அறிவூட்டிய காலம்
3. மகான் பொ. கைலாசபதியோடு வாழ்ந்து, கற்று, உருமாற்றம் பெறற காலம்.
4. துறவு வாழ்க்கைக் காலம்.

பண்டிதமணி அவர்கள் சாவகச்சேரியில் வாழ்ந்த மூன்று பொன்னம்பலபிள்ளைகள்; ''பிள்ளைப்புலவர்'' ம. க. வேற்பிள்ளையின் புதல்வர்கள், அ. குமாரசுவாமிப்புலவர், வித்துவான் ந. சுப்பையாபிள்ளை முதலியோரிடம் இலக்கியம் இலக்கணம், சமயம் முதலியவற்றை முறைப்படி பயின்று பேரறிஞரான காலம் முதலாவது கட்டம். இக்காலகட்டத்திலே அவர்கள் தமிழிலக்கிய வழியை நன்கு தெரிந்து கொண்டார்கள். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியபோது அவர்கள் ஒய்வு ஒழிவின்றிக் கற்பித்து இலக்கிய இரசிகர்களையும் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களையும் பண்டிதர்களையும் கற்பிக்கும் ஆற்றல் வாய்ந்த ஆசிரியர்களையும் உருவாக்கினார்கள். இக்கால கட்டத்தில் 'ஈரப்பலாச்சங்க' உறுப்பினர்களுள் ஒருவராகும் பேறு பண்டிதமணி அவர்களுக்குக் கிடைத்தது. வே. நடராசா, பொ. கைலாசபதி, கலாநிதி சு. சிவப்பிரகாசம் முதலிய பலர் இச்சங்கத்தில் இருந்தனர். அரசியல், இலக்கியம், சமயம், உள்ளூர் வெளியூர்ப் புதினங்கள் எல்லாம் இங்கே அடிபடும், இலக்கியம், அரசியல் ஆகியவற்றைச்சார்ந்திருந்த பண்டிதமணி அவர்கள் படிப்படியாகச் சமயி ஆக உருமாற்றம் பெற உப அதிபர் பொ. கைலாசபதி அவர்களது தொடர்பு வழி வகுத்தது. இலக்கிய ஆர்வம் படிப்படியாகக் 'கண்படுப்போர் கைப்பொருள் போல்' நழுவியது. '1953க்குப்பின் பண்டிதமணியின் இலக்கியவழி- கவிதைவழி- தொடரவில்லை' என்று சிலர் கருதுவதற்கான ஒரு காரணி இங்கே அமைந்து கிடக்கிறது.

''இலக்கியவழி'' இரண்டு பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. முதற் பதிப்பைவிட இரண்டாவது பதிப்பு விரிவாகவுள்ளது. எனினும் இரண்டுமே முழுமை பெறவில்லை. இது சில தவறான ஆய்வுகளுக்கு வழி வகுத்துள்ளது. எனவே இலக்கிய வழி பற்றிய பண்டிதமணி அவர்களின் கருத்துக்கள் அனைத்தையும் கொண்ட புதிய பதிப்பாக- தொகுப்பாக ''இலக்கியவழி'' வெளிவர வேண்டும். இத்தகைய ஒரு தொகுப்பு பண்டிதமணி அவர்களது வழிகாட்டலில் நிகழ வேண்டும். பல்வேறு பணிகளுக்கு மத்தியில் இப்பணியையும் நிறைவுசெய்யப் பண்டிதமணி அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டுகிறோம்.

## கல்யாணமாம்....

—5-ம் பக்கத் தொடர்

தனர். பின் ''நாங்களும் பார்த்துக் கொண்டிருப்பதில் பயனில்லை காரியத்தை முடித்து விட்டு வீடு செல்வோம்'' என்று கூறிக் கொண்டு சபையில் அமர்ந்தனர். ''சம்பிரதாயத்தைப் பார்க்க முடியாது நாங்களும் போய்க் கடமையை முடிப்போம்''என்றாள்சித்தி. ''போற போக்கைப் பார்த்தால், இனி மேல் கல்யாண வீட்டிற்கு வருபவர்களை உணவுப் பார்சலும் கொண்டு வரும்படி கூறினாலும் ஆச்சரியம் இல்லை'' என்று கூறிக் கொண்டு சித்தியுடன் சபையில் அமர்ந்தேன் சோறு பரிமாறப்பட்டது. என்னால் மூக்கைப் பிடிக்காமல் இருக்க முடியவில்லை பருப்பு என்ற பெயரில் வெந்நீர் ஊற்றப்பட்டது. அதில் ஓரிரு பருப்பு மிதந்தன. மிகுதியை உங்கட்கு கூறத் தேவையில்லை. எனக்கோ சரியான பசி. ஆனால் உணவு உண்ண முடியவில்லை. உண்டதாகப் பாவனை செய்தேன். தொடர்ந்து பாயாசம் எனும் பெயரில் சேலைக்குப் போடும் ''ஸ்ராஜ் (Starch) போல் ஏதோ ஊற்றப்பட்டது. எனக்கோ வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. ஒருவாறு சமாளித்துவிட்டு ''உணவு கூட மொடேர்ன் உணவுபோல் இருக்குது சித்தி'' என்று கூறிக் கொண்டு வீடு திரும்பினேன்.

வீட்டை அடைந்ததும், வீட்டில் கணவனும் மகனும் உண்டு மிஞ்சிய இரு இடியப்பங்கள் இருந்தன. அவற்றைக் ''காய்ந்த மாடு கம்பில் வீழ்ந்தது'' போல் உண்டு ஒரு சிறிது பசி ஆறினேன். அப்பொழுது எனது கணவன் ''அம்மா கல்யாண வீட்டில் உணவும் பலகாரங்களும வயிறு புடைக்க சாப்பிட்டது போதாதென்று, இங்கும் வந்து ஒரு பிடி பிடிக்கிறு,'' என்று எனது மகனிடம் கூறி என்னைக் கேலி செய்தார். மகனும் ''அம்மாவிற்கு என்ன நல்ல கல்யாணச் சாப்பாடு'' என்றான் கேலியாக. நான் ஒன்றும்கூறுமல் ''நான் போனது மொடேர்ன் திருமணம் என்பது இவர்கட்கு தெரியாது'' என்று எனக்குள்ளே கூறிக் கொண்டேன்.

# போராளியின் தோற்றம்

# ஒரு அதிசய இறகு விமானம்

லோங் தீவில் உள்ள கிறம்மன் விண்வெளி யாக்கத்தின் பறக்கும் பரிசோதனை நிறுவனத்தில் ''அந்தமில்லா நட்சத்திரங்களும் கோடுகளும்'' என்ற சொற்கள் பொறித்த பட்டயம் ஒன்று தொங்குகிறது. 1500 பணியாளரும் பிரமுகர்களும் ஆரவாரத்துடன் கைதட்டி, புதிய போராட்ட சந்ததியை உருவாக்கும் என வான்படையினரால் எதிர்பார்க்கப்படும், எக்ஸ் 29ஏ என்ற பரீட்சார்த்த விமானத்தை மறைத்திருந்த திரை விலகியது. அது ஒரு அழகான உருவம் என்றார் துணை ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ், ஆனால் இறகுகளைப் பின்புறமாக வைத்திருக்கின்றன என முடித்தார் புஸ்.

இவ்வில்லை இறகுகள் வலப்பக்கம் உள்ளன. அவை முன்பக்கம் வீசிக்கொள்ளும். அவை வால் பக்கத்தின் முடிவில் 35 பாகை கோணத்தில் இணைக்கப்பட்டுள்ளன இச்சாதனம் இயந்திரக் கோளாறுகளைத் தடுக்கும். பக்க இழுவையைக் குறைக்கும், அதிவிசேட வேகத்தில் எக்ஸ் 29ஏயைப் பறக்கவிடும். 'டெல்டா'டின் இருக்கைக்குப் பின்னால் கனாட் எனப்படும் செதில் போன்ற நீண்ட கருவிகள் உள்ளன (கனாட் என்னின் பிரெஞ்சு மொழியில் தாரா) உண்மையில் இவ்விமானம் பறக்கும் போது ஒரு தாராவைப் போலிருக்கும்.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் யங்கோஸ் யே யு. 287 ஜெட் என்ற விமானத்தை சிறிது முன்பக்கம் சாய்ந்துள்ள இறகுகளுடன் தயாரித்தவர் சோதனைகளின் போது இது நன்கு பறந்தது ஆனால் இதன் ஒலிக்கட்டுப்பாட்டுக் கருவி 1947ல் உடைந்தபோது அந்த உருவமைப்பு ஒரு பிரச்சனையைக் கொடுத்தது முன் வளைந்த இறகுகள் கிழித்தெறியப்பட்டன. ஈயம் கலந்த இறகுகள் உருக்கைவிடப் பலம் வாய்ந்ததும் 45 வீதம் வரை கனம் குறைந்ததுமாகும். எக்ஸ் 29ஏ யின் இறகுகளின் தோல் ஈயம் கலந்தவை. ஆனால் இத் தனித்துவமான உருவம் எக்ஸ் 29 ஏ யை ஒரு விளையாட்டுக் குதிரையென மதிக்க செய்யும் 'ஒரு அம்பினைப் பின்நோக்கி எறிவதைப் போன்றது'' என்றார் கிறம்மன் நிலையத்தின் திட்டத்தலைவர் ரொபேட் ரோமா. இதன் பெருமளவு கருவிகளைக் கையாண்டு இப்பறவையை ஒழுங்காகப் பறக்க வைக்க எந்த மனிதராலும் முடியாது எனவேமூன்று கம்பியூட்டர்கள் பைலட்டின் வேலையைச் செய்கின்றன நொடிக்கு நாற்பது தடவைகள் இறகுகளைத் திருப்புகின்றன பைலட் கம்பியூட்டருக்கு வழிகாட்ட கம்பியூட்டர் விமானத்திற்கு வழிகாட்டுகின்றது. கம்பியூட்டரா யாவும் செயலிழப்பின் எக்ஸ் 29 ஏ, பத்தில் இரண்டு நொடியில் தானாகவே நொருங்கி விடும்

எக்ஸ்29ஏ யின் வெள்ளோட்டத்தில் கலந்து கொண்ட போது அமெரிக்க உப ஜனாதிபதி புஸ், இராணுவ பலத்தை பிரபலப் படுத்தும் தம் நிர்வாக நோக்கத்தைச் சுட்டிக் காட்டி, இது வெற்றியடைந்தால் இந்த விமானம புதிய கண்டு பிடிப்புகளின் ஆய்வுக் கூடமாக அமையும், எதிர்கால போர் ஜெட் விமானங்களின் நிலப்பிரதியாக இது திகழும் என்றார்.

'பென்டக்கன' பாதுகாப்பு உயர் ஆராய்ச்சித் திட்ட நிறுவனத்தின இயக்குநர் ரொபேட் கூப்பர், பொது முன்னேற்றங்களில் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்ள நாம் விரும்பிய அந்த நட்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமெனத் தீர்மானித்துள்ளோம் என்றார்.

## பிள்ளையின்....

—3-ம் பக்கத் தொடர்

யொன்றுக்கு மொத்தமாக ஆறு மணித்தியாலங்கள் தனும் தமதுகுழந்தைகளுடன் கழிக்காத பெற்றோரும் இருந்தனர். குழந்தை வளர்ப்பில் இது தகப்பனரின் மிகக் குறைவான ஈடுபாடாகக் கருதப்படும். ''தகப்பனுருடன் அதிக நேரம் பழகிய பிள்ளைகள் ,மாணவர்எனும் வகையில் உயர்ந்த மட்டத்தில் கல்விச் சாதனைகள் புரிந்தனர்.'' என ஆய்வாளர்கள் முடிபு செய்தனர். இதற்குக் காரணம் யாது? இளைஞர்கள், குழந்தைகள், சாதனைகளை நிறுவுதற்குத் தன்னம்பிக்கைதேவை. ஒருபிள்ளை தனது தகப்பனுருடன் உவப்பான ஓர் உறவைப் பேணிவருகையில் அதன் தன்னம்பிக்கை செழிப்பாக வளர்கிறது. ஒரு குழந்தையைச் சமுதாயத்தின்பொறுப்பு வாய்ந்த, முக்கிய ஓர் அங்கத்தவராகப் பயிற்றுவதும், சமுதாயம் போற்றிப் பேணும் பண்புகளை அக்குழந்தைக்குக் கற்பிப்பதும், கீழ்த்தரம் எனும் கயமை தவிர்த்து, ஓர் ஆள் பிறப்பு முதல் இறப்புவரை வாழ்க்கையில் சிக்கனப் பற்றுக்கோடாகக் கொண்டு அனுசரிக்க வேண்டிய அடிப்படைத் தத்துவங்களை அதாவது ''வாழ்க்கை விதிகளை,'' குழந்தைப் பராயத்திலேயே அதற்கு நன்கு உணர்த்துவதும், குழந்தையின் குடும்பத்தினர் அனைவரையும் சார்ந்த பணி ஆகும்.

அமெரிக்காவில் எத்தனையோ பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றுட் தலைசிறந்தன என அகில உலகிலும் பாராட்டப் பெற்றுவரும் ஹார்வர்ட், யேல், எம் ஐ ரீ (''மஸாசுஸெற்ஸ் இன்ஸ்ரிரியூற் ஒஃவ் ரெக்னொலொயிஜி'') முதலாய ஆறு, அல்லது ஏழினுள், கோர்ணெல் பல்கலைக்கழ கமும் ஒன்று. அங்கு 'மிட்ல்கிளாஸ்' என வழங்கும் நடுத்தர வகுப்பினைச் சேர்ந்த பையன்களை மையமாக வைத்து அப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஓர் ஆய்வு நடத்தினர்கள். பெற்றோரில் ஒருவரோ அல்லது இருவருமோ அடிக்கடி வீட்டில் இல்லாதிருக்கும் இல்லங்களில், பிள்ளைகள் தமது வாழ்க்கைத் தத்துவங்களை எப்படி உருவாக்கிக் கொள்கிறார்கள்? 'குறிப்பாக முழுவளர்ச்சி வயதை மருங்கிக்கொண்டிருக்கும் பிள்ளைகளை எழிநடத்த, கைவசம் பெற்றோர் இல்லாதுபோகவே, அவர்கள் தமக்குள்ளேயே, ஒருவரோடு ஒருவர் கருத்துப் பரிமாறி, இத்தகைய தத்துவங்களை உருவமைத்துக்கொள்கின்றனர். இவ்வாறு உருவமையும் வாழ்க்கைத் தத்துவங்கள் எப்படிப்பட்டன? அவை எதிர்காலம்பற்றி நம்பிக்கை இழந்தனவாக இருக்கும்; அல்லது நன்மையைக் காட்டிலும், தீயவை விளையப் போகின்றன என்ற எதிர்பார்ப்பு உடையனவாக இருக்கும். அவ்வழ்க்கைத் தத்துவங்களில பொறுப்புஉணர்ச்சி, தலைமை தாங்கும் ஆற்றல ஆகியன குறைவாகப் பொதிந்திருக்கும். அத்துடன் சமுதாயத்திற்கு முரணான, விரோதமான, நடத்தைகளில் அப்பிள்ளைகளை ஈடுபடுத்தும் தன்மையினவாகவும் அத்தத்துவங்கள் உருப்பெறும்.'' இவையே கோர்ணெல் பல்கலைக்கழக ஆராச்சியாளர்கள் கண்டவை.

இப்பேர்ப்பட்ட சான்றுகளைக் கண்ணுறும் நடத்தையியல் வல்லுநர்கள், எமது சமுதாயத் தலையிடிகள், தொல்லைகள், பலவற்றின் காரணகர்த்தா அல்லது மூல காரணர், தமது கடமையைக் கவனியாதுவிடும், அசட்டையான தகப்பனர் தான், என எமக்குச் சுட்டிக் காண்பிக்கத் துவங்கியுள்ளனர். இளைஞர்கள் புரியும் குற்றத் தவறுகள், போதையூட்டும் மருந்து வகைகளைத் தகாத முறையாக உட்கொள்ளல், அதாவது போதை வஸ்துக்களின் தகாப் பிரயோகம், திருமணம், குடும்பம் என்பவற்றுக்கு எதுரான கிளர்ச்சி, முதலாகிய இப்பொல்லாங்குகள் எல்லாம் விளைவதற்கு, கடமையைப் பாராமுகமாக நிறைவேறாது விடும் தகப்பனர் தாம் காரணர், என்கிறனர் நடத்தையியல் வல்லுனர்கள்.

ஆகவே, எமக்கு வேண்டிய இன்றைய தேவை யாது? பண்புள்ள, உறுதிநிலை கொண்ட ஒரு தகப்பன் எதேச்சாதிகாரமாக, மனம்போன போக்கில தந்தையின் அதிகாரம் செலுத்தும் ஒருவரல்லர்; பரிந்து, குழந்தைகளை கூறிக் கொண்டு வருவனவற்றைக் கருத்துடன் செவிமடுத்து, தந்தையின் அதிகாரம் பாலிக்கும ஒரு தகப்பனர், பிள்ளைகளுக்குத் தகப்பனர் ஆற்ற வேண்டிய சேவையைத் தேவை ஏற்படும் போதெல்லாம் தாமாகவே, கைவசம் நின்றும் நிறைவேற்றிவரும் ஒரு நற தந்தை.

(1985ம் ஆண்டு பரிசளிப்பு உரையின் ஒரு பகுதி)

## ஐம்பதுகளில்....

—6-ம பக்கத் தொடர்

அளவான பேச்சு மொழிப் பிரயோகம், இடையிடையே சிறு நகைச்சுவை என்பவற்றை இவரின் எழுத்தில் காணலாம். கதையோட்டத்திற்கு ஊறு செய்யாத விதத்தில் கதையின் சூழமைவைச் சித்திரிக்கும் ஆற்றல் இவருக்கு உண்டு. கமலினி நாவலில் சிதம்பரியரசர், மயில்வாகனம் ஆசிரியர் ஆகியோரின் பாத்திரப் படைப்பு கச்சிதமாக அமைந்துள்ளது.

சில காலமாக ஏனோ இந்த எழுத்தாளர் தன் பேனையைத் தூக்க மறந்திருக்கிறார்.

## மரணதண்டனையா ?...

—6-ம் பக்கத் தொடர்

நடத்தேறிய மரண தண்டனைகளுக்கும் இடையிலான தொடர்பு ஏதும் உண்டா? அப்படியாயின, விஞ்ஞான ரீதியாக ஏற்றுக் கணிக்கத் தகுந்த ஆராய்ச்சி எதுவும் அத்தகைய தொடர்பை வெளிக்கொணரவில்லையே! எனச் சுட்டிக்காட்டுகின்றனர் இவ் வெதிர்வாதிகள்.

(ஏ. எவ். பி.)

ஈழமுரசு

## மனப்புண்ணை அகற்றுவதற்கு புனர்வாழ்வை துரிதப்படுத்துக!

''கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு வேலைகளை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும். இது நெருக்கடியைக் குறைப்பதோடு மனப்புண்ணை ஆற்றி இப்பகுதி மக்களிடையே சமாதானத்தை நிலைநாட்டி நாட்டில் ஒற்றுமையை உருவாக்க உதவும்'' இவ்வாறு நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்த அமைச்சர் பாக்கீர் மரைக்கார் வற்புறுத்தி அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளார். கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்ற கலவரங்களை அடுத்து இப் பகுதிகளுக்கு விஜயம்செய்த அமைச்சர் தாம நேரில் சென்று கண்டவை அடங்கிய அறிக்கையையே அவர் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழத்திற்கு ஆதரவு வழங்கினராம்!

# பத்து தமிழ் இளைஞர்களுக்கு சிங்கப்பூரில் வேலை காலி!

இலங்கையில் தமிழ் சிறுபான்மையினர் கோரும் பிரிவினைவாதத்திற்கு ஆதரவளித்ததாகக் கூறப்படும் பத்து இலங்கையர்கள் அவர்களது வேலை உத்தரவுப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதால் சிங்கப்பூரை விட்டு வெளியேறி வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளதாகச் சிங்கப்பூர் செய்தி ஏடான ''ஸ்ரெயிற் ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூரின் தேசிய பல்கலைக் கழகத்தில் இவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வந்தவரெனவும், கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஆயுதக் கடத்தல் சம்பந்தமாக சிங்கப்பூர் உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவு மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து இலங்கை தீவிரவாத இயக்கமொன்றிற்கு விநியோகிக்கும் நோக்கத்துடன் ஆயுதங்களைக் கப்பல் மூலம் அனுப்ப முயன்றமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இரண்டு சிங்கப்பூர் பிரஜைகள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மூன்னூறு ஸ்ரென்கன் துப்பாக்கிகள், எழுநூறு சுழல் துப்பாக்கிகள், வெடி மருந்துகள் முதலியவற்றை அனுப்ப முற்பட்டிருந்தமை பற்றியும், இவை சென்னைத் துறைமுகத்தில் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டமை பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### யுத்த நிறுத்த....

— 1-ம் பக்கத் தொடர்

நடந்திருப்பதாகவும் அதனுல் தாம் பூட்டானில் நடைபெறவுள்ள மகாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என

### தெணியானின் சொத்து அறிமுக விழா

(உடுப்பிட்டி)

தெணியானின் 'சொத்து' அறிமுக விழா இன்று மாலை 4.30 மணிக்கு வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெறும். விழாவிற்கு திரு. செ. சதானந்தன் தலைமைதாங்குவார். திருவாளர்கள் க. தங்கவடிவேல், கருணையோகன், செ.பேரின்பநாயகம் த. கலாமணி ஆகியோருடன் நூலாசிரியரும் கருத்துரை நிகழ்த்துவார்.

### யாக்கு நீரிணை....

... 1ஆம் பக்கத் தொடர்

ளையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### நயினை அம்மன்....

...1ஆம் பக்கத் தொடர்

களுடன் ஆலோசிப்பதற்காக பொது ஜன தொடர்பு அதிகாரி திரு. குலசேகரம்பிள்ளை வேலணை உதவி அரசாங்க அதிபர் மைதிலி சோமசுந்தரம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சாந்தினி சுப்பிரமணியம் ஆகியோர் நயினாதீவு முகாமிற்குச் சென்றிருந்தார்கள்.

இச் சந்திப்பின்போது திருவிழா நேரத்தில் பாதுகாப்புப் படையினர் எவரும் ஆயுதங்களுடன் கோவில் பகுதிக்குச் செல்லமாட்டார்கள் என உறுதியளிக்கப்பட்டது. குறிகட்டுவானிலிருந்து வரும் படகுகள் அனைத்தும் முதலில் நயினாதீவு புத்த விகாரைத் துறைமேட்டிற்குச் சென்றே செல்ல வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டநேரத்தில்

## பண்டிதமணியின் இரு நூல்கள் இன்று வெளியீட்டு விழா

இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய அன்பினைந்திணை, அத்வைத சிந்தனை ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா திருநெல்வேலி கலாமன்றத்தில் இன்று காலை நடைபெறவுள்ளது.

பண்டிதமணியின் 86ஆவது பிறந்த தினத்தையொட்டி நடைபெறும் இவ் விழா யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும். அத்வைத சிந்தனை அறிமுகவுரையை பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களும். அன்பினைந்திணை அறிமுகவுரையை பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையும் நிகழ்த்துவார்கள்.

இரு நூல்களின் முதற் பிரதிகளை முறையே பேராசிரியர் அ. சண்முகதாசும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் பெற்று உரை நிகழ்த்துவார்கள்.

திரு. அ. பஞ்சாட்சரம் நன்றியுரை நிகழ்த்துவார். இவ்வெளியீட்டு விழாவில் பண்டிதமணி அவர்கள் சமுகமாயிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இன்று ஆனந்தராஜ...

-- 1ஆம் பக்கத் தொடர்

2-30 மணிவரை விசேஷ ஆராதனை நடைபெற்ற பின் இரங்கல் உரைகள் இடம் பெறும். பிற்பகல் 3-00 மணிக்கு மெயின் வீதி. பழைய பூங்கா வீதி, கண்டி வீதி வழியாக வந்து சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

நேற்று பல பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் அவரின் இல்லத்திற்குச் சென்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

### மினித் தியேட்டர்கள்

—1ம் பக்கத் தொடர்

படங்களே காண்பிக்கப்படுகின்றன. தியேட்டர்களில் திரையிடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள அல்லது தணிக்கைக்குட்படுத்தப் பட்ட காட்சிகள் 'மினி சினிமா'க்களில்

## ஆறுமுக நாவலர் அன்பர்கள் கூட்டம் நாளை

நாவலர் சபையின் பணிகளை விரிவுபடுத்துவதைப் பற்றி ஆலோசிப்பதற்காக நாளை திங்கட்கிழமை காலை ஒன்பதரை மணிக்கு நல்லூர் நாவலர் நிலையத்தில் ஆலோசனைக் கூட்டமொன்றைச் சபை ஏற்பாடு செய்துள்ளது. நாவலர் அன்பர்கள் அனைவரும் தவறாமல்

இலங்கையில் தமிழ் சிறுபான்மையினர் கோரும் பிரிவினைவாதத்திற்கு ஆதரவளித்ததாகக் கூறப்படும் பத்து இலங்கையர்கள் அவர்களது வேலை உத்தரவுப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதால் சிங்கப்பூரை விட்டு வெளியேறி வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளதாகச் சிங்கப்பூர் செய்தி ஏடான "ஸ்றெயிற் ரைம்ஸ்" செய்தி வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூரின் தேசிய பல்கலைக் கழகத்தில் இவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வந்தனரெனவும், கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஆயுதக் கடத்தல் சம்பந்தமாக சிங்கப்பூர் உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவு மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து இலங்கை தீவிரவாத இயக்கமொன்றிற்கு விநியோகிக்கும் நோக்கத்துடன் ஆயுதங்களைக் கப்பல் மூலம் அனுப்ப முயன்றமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இரண்டு சிங்கப்பூர் பிரஜைகள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முன்னூறு ஸ்ரென்த் துப்பாக்கிகள், எழுநூறு சுழல் துப்பாக்கிகள், வெடி மருந்துகள் முதலியவற்றை அனுப்ப முற்பட்டிருந்தமை பற்றியும், இவை சென்னைத் துறைமுகத்தில் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டமை பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யுத்த நிறுத்த....

— 1-ம் பக்கத் தொடர்

நடந்திருப்பதாகவும் அதனால் தாம் பூட்டானில் நடைபெறவுள்ள மகாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார்கள்.

போர் நிறுத்தத்தை தீவிரவாத இயக்கங்கள் தான் மீறி நடந்துள்ளன எனவும், அரச படைகள் எச்சந்தர்ப்பத்திலும் போர் நிறுத்தத்தை மீறவில்லையெனவும் தெரிவித்த அமைச்சர் அத்துலத்முதலி தனிநபர்களை கொலை செய்வதும் போர் நிறுத்தத்தை மீறுவதே என்று கூறினார்.

உமாமகேஸ்வரன் தலைமையிலான தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகமும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் இம் மகாநாட்டை பகிஷ்கரிக்காது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## தெணியானின் சொத்து

## அறிமுக விழா

(உடுப்பிட்டி)

தெணியானின் 'சொத்து' அறிமுக விழா இன்று மாலை 4.30 மணிக்கு வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெறும். விழாவிற்கு திரு. செ. சதானந்தன் தலைமைதாங்குவார். திருவாளர்கள் க. தங்கவடிவேல், கருணையோகன், செ.பேரின்பநாயகம் த. கலாமணி ஆகியோருடன் நூலாசிரியரும் கருத்துரை நிகழ்த்துவார்.

## யாக்கு நீரிணை....

... 1ஆம் பக்கத் தொடர்

ணையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யுத்தத்தில் ஈடுபடக்கூடிய விமானப்படை ஹெலிக்கப்டர்களும் தினமும் 24 மணித்தியால கண்காணிப்பில் ஈடுபட்டுவருவதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூட்டான் மாநா....

—1ம் பக்கத் தொடர்

செய்தியாக அறிவித்திருந்தது.

இளைஞர் இயக்கங்களின் முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு சில இந்திய அரசியல்வாதிகள் கேட்க விருப்பதாகவும் புதுடில்லியில் செய்திகள் வெளியாகியுள்ளன.

## நயினை அம்மன்....

...1ஆம் பக்கத் தொடர்

களுடன் ஆலோசிப்பதற்காக பொது ஜன தொடர்பு அதிகாரி திரு. குலசேகரம்பிள்ளை வேலணை உதவி அரசாங்க அதிபர் மைதிலி சோமசுந்தரம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சாந்தினி சுப்பிரமணியம் ஆகியோர் நயினாதீவு முகாமிற்குச் சென்றிருந்தார்கள்.

இச் சந்திப்பின்போது திருவிழா நேரத்தில் பாதுகாப்புப் படையினர் எவரும் ஆயுதங்களுடன் கோவில் பகுதிக்குச் செல்லமாட்டார்கள் என உறுதியளிக்கப்பட்டது. குறிகட்டுவானிலிருந்து வரும் படகுகள் அனைத்தும் முதலில் நயினாதீவு புத்த விகாரைத் துறைமேட்டிற்குச் சென்றே செல்ல வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டநேரத்தில் கோவில் வளவிற்குள் பக்தர்கள் நடமாடுவதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இங்கு அத்தியாவசிய சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். திருவிழாவிற்குச் செல்பவர்கள் கட்டாயம் தமது அடையாள அட்டைகளையும் கொண்டு செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## துர்க்காதேவி திருவிழா

கொக்குவில்கிழக்கு, கோணாவளை ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய பத்தாம் நாள் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. பகல் விசேட அபிஷேக ஆராதனையும் பூஜையும் அம்பாள் வீதிவலம் வருதலும் அதனைத் தொடர்ந்து விசேட நாதஸ்வர தவில் இசை, வயலின் இசை, வில்லிசை முதலியனவும் இடம்பெறுகின்றன.

அடுத்த நாள் நண்பகல் விசேட பூசையும் அன்னதானமும், இன்னிசைக் கச்சேரியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

## யூலை 2

—1ம் பக்கத் தொடர்

மனக் கடிதத்திற் குறிப்பிட்ட மாவட்டங்களுக்குச் சென்று பதவியேற்க வேண்டும்.

ஏற்கனவே பெற்ற நியமனக் கடிதத்தில் அநுராதபுர மாவட்டம் குறிப்பிடப்பட்டவர்கள் அங்கு சென்று பதவி ஏற்கத் தேவையில்லை. அவர்கள் பதவியேற்க வேண்டிய விபரங்கள் தபால் மூலமும் பத்திரிகைகள் மூலமும் அறிவிக்கப்படும்.

இத்தகவலைக் கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் சட்டத்தரணி க. ஜெயக்குமார் நேற்று தெரிவித்தார்.

இரு நூல்களின் வெளியீட்டு விழா திருநெல்வேலி கலாமன்றத்தில் இன்று காலை நடைபெறவுள்ளது.

பண்டிதமணியின் 86ஆவது பிறந்த தினத்தையொட்டி நடைபெறும் இவ் விழா யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் கா. கைலாசநாதக் குருக்களும், அன்பினைந்திணை அறிமுகவுரையை பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையும் நிகழ்த்துவார்கள்.

இரு நூல்களின் முதற் பிரதிகளை முறையே பேராசிரியர் அ. சண்முகதாஸ், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் பெற்று உரை நிகழ்த்துவார்கள்.

திரு. அ. பஞ்சாட்சரம் நன்றியுரை நிகழ்த்துவார். இவ்வெளியீட்டு விழாவில் பண்டிதமணி அவர்கள் சமுகமாயிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று ஆனந்தராஜ...

-- 1ஆம் பக்கத் தொடர்

2-30 மணிவரை விசேஷ ஆராதனை நடைபெற்ற பின் இரங்கல் உரைகள் இடம்பெறும். பிற்பகல் 3-00 மணிக்கு மெயின் வீதி. பழைய பூங்கா வீதி, கண்டி வீதி வழியாக வந்து சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

நேற்று பல பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் அவரின் இல்லத்திற்குச் சென்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

## மினித் தியேட்டர்கள்

—1ம் பக்கத் தொடர்

படங்களே காண்பிக்கப்படுகின்றன. தியேட்டர்களில் திரையிடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள அல்லது தணிக்கைக்குட்படுத்தப் பட்ட காட்சிகள் 'மினி சினிமா'க்களில் தாராளமாகக் காண்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆறுமுக நாவலர் அன்பர்கள் கூட்டம் நாளை

நாவலர் சபையின் பணிகளை விரிவுபடுத்துவதைப் பற்றி ஆலோசிப்பதற்காக நாளை திங்கட்கிழமை காலை ஒன்பதரை மணிக்கு நல்லூர் நாவலர் நிலையத்தில் ஆலோசனைக் கூட்டமொன்றைச் சபை ஏற்பாடு செய்துள்ளது. நாவலர் அன்பர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### R. F. ஏபிரகாம்

திரு. R. F. ஏபிரகாம் (இளைப்பாறிய ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி வத்தளை. முகாமையாளர் ஈஸ்வரன் பிறதர்ஸ் தீர்வையற்ற விற்பனவு நிலையம் கொழும்பு) காலமானார். இவர் டொறத்தியின் அன்புக் கணவரும், சுரேஷ் (டுபாய்) ஷார்மனா (நைஜீரியா) மஞ்சுளா, பிரேமினா ஆகியோரின் அன்புத் தந்தையும், A. C. இம்மானுவேல் (நைஜீரியா) அவர்களின் அன்பு மாமனாரும், நிஷாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இம்மானுவேல், டாக்டர் A. L. ஏபிரகாம், இமாக்குலேற் (ஆசிரியை யாழ். புனித சார்ள்ஸ் ம. வி.) ராஜு (ஜேர்மனி) கென்னடி காலஞ்சென்ற அன்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிளோசம், செபஸ்ரியன் (யாழ். கட்டிடத் திணைக்களம்) ஜொய்சி, நவம், பான்சி, ஜூலி. மேரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (30-6-85) பிற்பகல் 4-00 மணிக்கு யாழ். புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

671, பீச் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்: டாக்டர் A. L. ஏபிரகாம்

## மரண அறிவித்தல்

### திரு. C. E. ஆனந்தராஜன்

சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர்
செல்லையா எட்வின் ஆனந்தராஜன்

காலமானார்

அன்னார் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி. ஆசிரியை பத்மா அவர்களின் அன்புக் கணவரும், தேவ், சொர்ணா. வசந்தி, ஜெயந்தி, ஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற G S. செல்லையா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, முன்னாள் அதிபர்), திருமதி. சொர்ணம்மாவின் அருமை மகனும், திருமதி. செல்வி செல்லையாவின் பெருமகனும், காலஞ்சென்ற வண J.W A கதிர்காமர்; திரு. நேசம் கதிர்காமர் ஆகியோரின் மருமகனும், குலம் மில்ஸ் (பிரி, கயானா) அவர்களின் மாமனாரும், கிறிஸ்தோபல், கருணைராசன் (லண்டன்) மகிழ்மலர், ரஞ்சிதமலர், றேய், மனோ, லலிதா, சாந்திலா, சகுந்தலா ஆகியோரின் சகோதரரும், P.T சாமுவேல், லீலா சொலமன், ராஜன் கதிர்காமர் (அதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி) அழகன் (Y M C A), அருட்செல்வன் நிக்நோம், சீலன், (டோக்கியோ) சீதா சந்திரன் (சிங்கப்பூர்) வண. சத்தியன், வண. J C, மேதர், கருணா, E.R. (f) பிச், குமாரன், வண. நேசன், ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

30-6-85 இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி, பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடக்கவிருக்கும் ஆராதனையின் பின்னர், அன்னாரின் நல்லடக்கம் சென். ஜோன்ஸ் சேமக்காலையில் இடம் பெறும்.

"ஈழமுரசு" [illegible] 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 30-06-1985 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336

# விடியலைத் தேடும் வெண்புறா

**செம்பியன் செல்வன்**

## மூன்றும் அத்தியாயம்

1

பூபாள ராகம் விழிமலர்த்த;
பூர்பனி நீர் திருமஞ்சனமாட்ட;
காலை இளந்தென்றல் பொன்மேனி துவட்ட;
குலம் தழைக்க மகரந்தம் மூக மினுக்க;
சூர்ய தேவன் பொட்டிடவே
புதுப் பூவாய் புனிதமாய் சிவந்து நின்றாள்.

— *கவிஞர் சத்யா*

காலை சோம்பல் முறித்தது. பொய்த் தூக்கத்தில் புரண்டது; அரை விழியில் உறவாடுவது – விழிப்பா, உறக்கமா? மோகன லயிப்பில் சுகம் காண... சோபன அழகாக நிலம் தெரிந்தது;


''என்ன மாரிமுத்து நித்திரைக் தூக்கத்தில ஒண்டுமே தெரியேல்லியோ?... என்ன பேசாமப் பாத்துக்கொண்டு நிக்கிறாய்?...''

''உம்... வாமிகவன் ஐயா இறங்கி... லொறியில இருந்து பேசிக்கொண்டிருக்கிறியள்... இல்லை... ஒரு நாளுமில்லாத திருநாளா காலமை என்னட்ட வந்திருக்கிறியள்... அதுதான் விளங்காமல் நிக்கிறன்...''

— வல்லிபுரத்தாரும் மகனும் லொறியால் குதித்தார்கள். டிரைவர் லொறியிலேயே இருந்தான். இந்தச் சந்தடியில் வீடு விழித்துக் கொண்டது. பாக்கியம் கை விளக்கோடு படலையடிக்கு வந்தாள்.

குடியரசுகளினதும் கட்டடப்பாணிகள் பிரதிபலிக்கின்றன. உள்ளே தேசத்தின் செல்வமுங் கலைவளமுந் தெரிகின்றன. போய்த் திரும்பும் போது, எல்லா சோவியத் குடியரசுகளுக்கும் விஜயம் செய்த உணர்வு உண்டாகிறது. வெறும் கண்காட்சியாக மட்டுமல்ல, மாஸ்கோ வாசிகள் தம் ஓய்வு நேரங்களை உல்லாசமாகக் கழிக்க வரும் ஓரிடமாகவும் 'விதிைஹா' திகழ்கிறது.

சோவியத் மக்களுக்கு உழைப்பு மட்டுமன்றி, ஓய்வும் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளது. சாதாரண அலுவலக வேலை நேரம் 9 – 4. மாலை நேரங்களை மாஸ்கோ வாசிகள் பல்வேறு விதங்களிற் கழிக்கிறார்கள்— வகுப்புக்கள், கலாசார மன்றங்கள், நூலகங்கள், விளையாட்டரங்குகள், பூங்காக்கள், நாடக அரங்குகள், சினிமாக்கள் என்று.



மாஸ்கோ தெருக்களில் ஒன்று.

நாட்டின் மிகப் பெரியதாகவும் உலகிலேயே கௌரவம் பெற்ற நாட்டிய அரங்காகவும் மாஸ்கோவின் பல்ஷோய் தியேட்டர் திகழ்கிறது இதை வெளியில் நின்று பார்க்கவே என்னால் முடிந்தது. பயணத் தேதிகளில் ஏற்பட்ட இழுபறிகள் போன்ற பல்வேறு காரணங்களால் ரிக்கெற் பெறமுடியாத துரதிருஷ்டம். பல்ஷோய் தியேட்டரில் ஆசனங்களைப் பதிவு செய்வது மாதங்களுக்கு முன்னரே கவனிக்கப்படவேண்டும். இரண்டாயிரம் பேருக்கு மேல் அமரக்கூடிய பல் தளங்களுள்ள—மண்டபமொன்றும், மண்டபத்தின் நீளத்திலும் மேடையின் நீளம் கூடுதலென்றும் சொன்னார்கள் பல்ஷோய் தியேட்டருக்கு சரித்திர முக்கியத்துவமுமுண்டு. 1922ல் இங்கு தான் முதலாவது அகில

சோவியத் மகாநாடு நடைபெற்றது; அதில் தான் சோவியத் ஒன்றியம் தோற்றம் பெற்றது.

சோவியத் நாட்டில் சினிமாவும் மக்கள் கலையாகவே திகழ்கிறது. அதன் தோற்றம் ருஷ்ய புரட்சியுடன் இணைந்தது. அப்போது எடுக்கப்பட்ட டொக்கு மெண்டரிகளே, சோவியத் சினிமாக் கலையின் முளைகளாகும். இந்த வளர்ச்சி, செர்கே ஐஸன்ஸ்தின், ஷூக்ஷின் என்று நீடிக்கிறது. கிட்டத்தட்ட வீட்டுக்கொரு ரெலிவிஷன் என்ற நிலை வந்தும் கூட சினிமா தன் இடத்தை இழந்ததாகத் தெரியவில்லை. நாடெங்கிலும் தினசரி திரையரங்குகட்குச் செல்வோர் தொகை ஒருகோடிக்கும் மேலாகும் என்று கணக்கிட்டுள்ளார்கள். ஒன்றியத்தின் 39 திரைப்பட ஸ்ருடியோக்களும் சராசரியாக ஆண்டொன்றுக்கு 150 கதைப் படங்கள், 100 தொலைக்காட்சிப் படங்கள் தவிர 1400 குறும் படங்கள் போன்றவற்றையும் வெளியிடுகின்றனவாம்.

இவையெல்லாவற்றையும் விட மாஸ்கோவிலும் லெனின் கிராதிலும் நான் பார்த்த கலைக் காட்சிச்சாலைகளில் எல்லாம் ஆர்வமிக்க மக்கள் கூட்டம் எப்போதும் நிறைந்திருப்பதைக் கண்டேன்.

மாஸ்கோவின் 'திரெத்தியாக்கோவ்' ஓவியக்காட்சிச்சாலை பிரசித்தி பெற்றது; மஸ்க்வா நதிக்கும் க்ரெம்ளினுக்கும் கிட்டத்தில் அமைந்திருக்கிறது. மக்களால் பெரிதும் விரும்பப்படுகிற இடம்- பல்வேறு கால கட்டங்களையும் சேர்ந்த ருஷ்ய ஓவியர்கள், சிற்பிகளின் கலைப்படைப்புக்களை இங்கே காணமுடிந்தது. தினமும் ஐந்து, ஆறு, ஆயிரம் பேர் வருவதாகச் சொன்னார்கள். 'இனி இது ஒருபோதும் வேண்டாம்' என்ற வரிசையில் அடங்கிய பரீஸ் புரொரொகோவின் ஒரு தொகுதி சித்திரங்கள், யுத்தத்தின் கொடுமைகளை மனதிற்பதியும்படி விளக்குவன.

ருஷ்யாவின் எங்கே போனாலும், போரின் கொடுமைகளைக் கூறி சமாதானத்தை வலியுறுத்தும் முனைப்பு தென்படுகிறது என்பதை மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. மாஸ்கோ சேர்க்கஸ் நிகழ்ச்சிகளின் தொனிப் பொருளுங்கூட அதுவாகத்தானிருந்தது.

## 10

மாஸ்கோவில் ஒரு தடவை நான் தொலைந்து போனேன். பகல் பதினொரு மணிக்கு 'ரேடியோ மாஸ்கோ'வில் சந்திப்பு இருந்தது. காலையில் வேறு வேலைகள் இல்லாததால் ஆறுதலாகப் புறப்பட்டேன். இதுவரை தனியாகச் செய்த மெத்ரோப் பயணங்கள் துணிவு தந்திருந்தன. எனவே இது ஒன்றும் பிரச்சினை இல்லை என்றுபட்டது; நண்பர்களிடம் மெத்ரோ வழி விசாரித்து வைத்துக்கொண்டேன்.

சரங்களும், அலுமினியத் தாள்களும் காற்றிற்கு நன்றி சொல்லி எல்லாரையும் அழைத்துக் கொண்டிருந்தன.

வேகமாக வந்த தனது மோட்டார் சைக்கிளை ஓரமாக நிறுத்தினன். வளவிற்குள் நின்ற லொறி அவன் புருவத்தை உயர்த்தியது. வளவிற்குள் யார் யாரோ—... வயதில் கூடியும் குறைந்தும் – பச்சை சிவப்பு மஞ்சள் நிறங்களாக... கலகலத்து .. பரபரப்பே இல்லாத பர பரப்பில் 'கிளுகிளுத்து' கவீரிட்டு......

மாரிமுத்து ஓடிவந்தான்.

"வாரும் தம்பி.... வாரும்...... ஏன் அப்பா...... அம்மா வரேல்லையா...?

"அப்பாவுக்கு ஏதோ அவசர அலுவல் எண்டு போக வேண்டி வந்திட்டுது......அம்மாவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்ல... அதுதான் என்னைக் கட்டாயம் போகச் சொல்லி அனுப்பினவை... வரேல்லை யெண்டு குறைவிளங்கவேண்டாம் எண்டும் சொல்லிவிட்டவை"

மாரிமுத்துவுக்கு ஏமாற்றமாக இருந்தது.

"அதுக்கென்ன?... பரவாயில்லை... வரேக்க அக்காவையெண்டா லும் அழைச்சுக் கொண்டுவந்திருக்கலாம். ரதிக்கும் சந்தோசமா யிருக்கும்......"

ரமேஷுக்கும் மூளையில் உறைத்தது. அக்காவும் வந்திருந்தா அக்காவின் சாட்டில ரதி வீட்டாரோடு நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற் பட்டிருக்கும். அவன் உள்ளே நுழைந்தான். சொர்க்கலோகமாக இருந்தது.

அவன் எதிர்பார்க்கவேயில்லை.

மாரிமுத்துவின் கூட்டாளிகள், பழைய வீட்டைத் தொடுத்து ஒரு புதிய பந்தலே – அசப்பில் சொக்கட்டான் பந்தலாகப் போட்டிருந்த னர். காட்டுத் தடிகளும், தென்னோலைக் கிடுகுகளும் எப்படி இந்த அதிசயத்தைச் சாதித்திருந்தன? ஏழைத் தொழிலாளர்கள் தம் உடைமை உறவோடு செயலாற்றினல் மண்ணிற்குக் கூட பொன்னின் மெருகூட்டிவிடுவார்கள் என்பது தெரிந்தது.

ரதியின் தமையனும் அவனது நண்பர்களும் அதனை அலங்கரிப்ப தென வானுலகை கிழிறக்கியிருந்தனர். நீர்வேலி கந்தசாமியின் பிர சித்தமான மணவறை தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டு பந்தலை நிறைத்திருந்தது. பக்கத்து வீட்டாரிடம் இரவல் வாங்கிய மின்சாரம் ஒளிக்கூடமாக்கிக் கொண்டு, மணவறையில் வர்ணஜாலம் செய்து கொண்டிருந்தது. மணவறையின் பின்புறத்தை வெள்ளிமினுங்கும் கறுப்புக் கம்பளம்... அமரும் இரத்தினக் கம்பளம்....




லெனின் குன்றுகள் மாஸ்கோவாசிகளுக்குப் பிடித்த இடமாக இருக்க வேண்டும். குன்றுகள் என்றதும் மலைப்பாங்கான இடத்தைக் கற்பனைபண்ணலாகாது. நகரில் மேட்டுப்புறமான- உயரமான இடம். சோவியத் நாட்டின் பல்வேறு இன மக்களையும் இங்கு காணமுடிந்தது. மத்திய ஆசியக் குடியரசுகளின் மக்கள்- முக்கியமாக உஸ்பெக்கியர்- தம் வர்ண ஆடை அலகாரங்களுடன் தனித்துத் தெரிந்தார்கள். சோவியத் யூனியன்தான், உலகில் மிக அதிகமான இனங்களைக் கொண்ட மிக அதிக மொழிகள் பேசும் மக்களைக் கொண்ட- நாடு. கிட்டத்தட்ட 130 மொழிகள்: எல்லாம் சட்டப்படி சமம்.

வேறெந்த நாட்டிலுங் காணப்படாத அளவிற்குப் பிரமாண்டமான அளவு தேசிய இனங்களைக் கொண்ட சோவியத் நாட்டில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருப்பது மகத்தான விஷயமாகும். 'நாங்கள் தேசங்களின் இஷ்டபூர்வமான ஒன்றியத்தை- ஒரு தேசம் இன்னொரு தேசத்தின் மீது எவ்விதப் பலவந்தமும் பாவிக்காத ஒன்றியத்தை- சம உரிமையையும் பரிபூரணவிசுவாசத்தையும், சகோதரத்துவ ஒருமைப்பாட்டையும், முற்றுமுழுதான இஷ்டபூர்வமான விருப்பத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு ஒன்றியத்தையே- விரும்புகிறோம்.' என்றார் லெனின். அதுதான் நடந்திருக்கிறது.

மாஸ்கோவிலேயே இந்தப் பல்தேசிய இனத்தன்மையை இன்னமுந்தெளிவாக, 'விதின்ஹா' என்றழைக்கப்படும் சோவியத் பொருளாதாரக் கண்காட்சிக்குப் போனபோது காணக் கூடியதாக இருந்தது. சோவியத் நாட்டின் பொருளாதாரம் எந்தெந்தத் துறைகளில் எப்படியெல்லாம் முன்னேறியிருக்கிறது என்பது மட்டுமன்றி, இன்னும் பல விஷயங்களையும் இங்கே கண்டுகொள்ளக் கூடியதாயிருந்தது.

நகரின் வடபுறத்தில் ஒரு சிறிய அழகான தனி நகராகவே அமைந்துள்ள காட்சி ஸ்தலத்தின் கட்டடங்களில் எல்லா சோவியத்

---

★ சாந்தன்

'ஆரப்பா அது... ஆரோட கதைச்சுக் கொண்டு நிக்கிறியள்...'

வல்லிபுரத்தார் சலித்துக் கொண்டார்: வீட்டில எல்லாற்ற நித்திரையையும் குழப்பிப் போட்டம் போல...''

மாரிமுத்து அவசரமாகக் கூறினன்; ''என்ன கதைக்கிறீங்களய்யா? .. நானும் எழும்பி அங்க பால் கறக்கப் புறப்படுற நேரம் தான்; முதல்ல வாங்கவன் உள்ள...''

''அதுவும் சரிதான். தம்பி நீயும் வா .. டிரைவர் நீங்க லொறியைப் பாத்துக் கொள்ளுங்க...'' – என்றவாறு வல்லிபுரத்தார் வளவுக்குள் நுழையவும், பாக்கியம் ஒதுங்கி நின்ருள்.

கேளன் சங்கதியை மாரிமுத்து .. 'லோட்'டோட நேரா ரவுணுக்குத்தான் போய்க் கொண்டிருந்தம்... திடீரென்று வழியில கொஞ்சப் பொடியன் லொறியை நிறுத்தி... ரவுணுக்குப் போக வேண்டாம். அங்க போற வாற வாகனங்களையெல்லாம் அடிச்சு நொருக்கிறுன் எண்டு வழியைத் திருப்பி விட்டாங்கள்... அது தான் இந்த வழியால வரேக்க முந்தி நீ சொன்ன குறிப்பில உன்ர வீட்டையும் பாத்திட்டுப் போவம் எண்டு லொறியை நிப்பாட்டினம்... இந்த நேரம் தங்கச்சியையும் போய் ஏன் எழுப்பித் கரைச்சலைக் கொடுப்பான்... அதோட, ரவுண் நிலமை கொஞ்ச நேரத்திலை சரியாகி விட்டா அப்படியே 'லோட்'டை இறக்கிவிட்டுப் போகலாம் எண்டு தான்... உன்னை வந்து குழப்பிப்போட்டன்......''

மாரிமுத்துவுக்கு சிரிப்பு வந்தது.

''ஐயாவுக்கு இப்ப நாட்டின்ர நிலமை சரியாகப் புரியேல்லப் போல... .. ரவுணில பதட்டம் எண்டா எப்ப அடங்கும். எண்டு சொல்ல முடியாது... கடைக்காரரும் இண்டைக்குத் துறப்பினமோ தெரியாது ..... எல்லாத்தையும் பாத்துத்தான் நீங்கள் ரவுணுக்குப் போகவேணும்......''

எல்லாரும் முற்றத்தில் இழுத்துப் போட்டிருந்த மரக்கட்டிலில் இருந்தார்கள். மாரிமுத்து எழுந்து உள்ளே வந்தான். வீட்டில் எல்லாரும் விழித்துக் கொண்டு உள்திண்ணையிலிருந்து விருந்தாளிகளை வேடிக்கை பார்த்தார்கள். பாக்கியம் தேனீர் தயாரிப்பதிலீடுபட்டுக் கொண்டிருந்தாள். மனைவியுடன் 'கிசுகிசு'த்துவிட்டு வெளியே வந்தான்.

''ஐயா, நல்ல நாளும் அதுவுமா வந்திருக்கிறியள்... எங்கட வீட்டிலும் ஒரு விசேஷம்...... என்ர மூத்தவள் பக்குவப் பட்டுட்டாள்...... அதையும் முறையாக் கொண்டாட வேண்டும் எண்டு வீட்டில பெரிய கரைச்சல்... –''

''அப்படியே மாரிமுத்து... மெத்தச் சந்தோஷம்... .. உதுகளுடல தான் வீட்டில் இருக்கிற பெண்மரசுகள் கொஞ்சமெண்டாலும் சந்தோஷம் கொண்டாடுதுகள். கட்டாயம் நீ சாமத்தியச் சடங்கை சிறப்பா நடத்து...... உனக்கு ஏதும் காசுபணம் தேவையெண்டா என்னட்டக் கூசாமக் கேள். கட்டாயம் தாறன்... .. இந்த லோட்டைப் பறிச்சவுடன் கையில காசுதான்...'' — வல்லிபுரத்தாரின் குதூகலம் வளவெல்லாம் ஒலித்தது. பாக்கியம் மகிழ்ந்து போனுன். அருகிருந்த விசுவலிங்கம் கூச்சத்தால் நெளிந்தான்.

பாக்கியம் முகம் நிறைய மகிழ்ச்சியுடன் தேனீர் கொண்டுவந்தாள். வல்லிபுரத்தார் மிகவும் வேண்டப்பட்டவராகத் தெரிந்தார்.

— ''ரதி நல்ல யோகக்காரி... ராத்திரி முழுதும் காசுக்கு என்ன செய்வது என்று மண்டையை உடைத்துக் கொண்டிருக்க... காலையில வீடு தேடி வந்து ஆள் பணம் தருகுது......''

''ஐயா... இங்கயே காலமைச் சாப்பாட்டையும் எடுத்துக்கொண்டு தான் போகவிடுவன் .....'' —என்றுன் மாரிமுத்து;

''வேண்டாம் .. மாரிமுத்து; இப்ப கனக்க வேலையிருக்கு...... லொறியைப் பத்திரமாக ஒரு இடத்தில விடவேணும்......

''அதுக்கொண்டும் யோசியாதையுங்க ஐயா...... இப்ப பெருந்தெருக்களில உள்ள வீடுகளில வாகனங்களை விடுறது அவ்வளவு பாதுகாப்பில்லை. எங்கட வளவு ஒழுங்கைக்குள்ள இருக்கிறதால ஒருத்தற்ற கண்ணிலும் படமாட்டாது...... ஆபத்தும் குறைவு...''

''அப்படியே சொல்லிறு ...... சரி, நான் கொஞ்ச நேரம் சாயப் போறன். தம்பி நீயும் கொஞ்சம் படுத்திரு; பிறகு எழுப்பிப் பார்க்க வேண்டியதைப் பாப்பம்...'' — என்றவாறு கட்டிலில் சாய்ந்தார். பாக்கியம் ஒரு தலையணையைக் கொண்டுவந்து மாரிமுத்துவிடம் நீட்டினுள், விசுவலிங்கம் தான் டிரைவரோடு லொறியில் தங்குவதாகச் சென்றுன்.

'அப்ப ஐயா படுத்திருங்க...... நான் உங்கட தங்கச்சியாற்ற வீட்ட போய்விட்டு, அவயளுக்கும் உங்கட சங்கதியைச் சொல்லிட்டு வாறன்' — என்றவாறு மாரிமுத்து வெளிக்கிட்டான்.

பறவைகள் சூரியனை வரவேற்க, கிழக்காக வானைக் கீறிப் பறந்தன.

வேப்பமரத்தில் 'லௌட்-ஸ்பீக்கர்' ஊரைக்கூட்டி, வாலிபர்களுக்கு செய்தி தெரிவித்துக் கொண்டிருந்தது. 'என் வீட்டில் முதல் மொட்டு மலர்ந்தது கண்டீர்!' இளைஞர்கள் குறும்புச் சிரிப்போடு தம் தோள்களைக் குலுக்கி விட்டுக் கொண்டனர். வர்ணக் கடதாசிச்

நேரே போனால் போயிருக்கலாம். ஆனால் இடையில் ஒரு யோசனை வந்தது. நேரமிருக்கிறதே, இனி பஸ்ஸில் போய்ப் பார்க்கலாம் என்று பாதி வழியில் மேல் உலகம் வந்தேன். அவ்வளவுதான். அரைமணி சுற்றினேன். மணி பதினொன்றுக்கும் மேலாகிவிட்டது. பேட்டியை ஒத்திவைக்கலாமா என்றும் யோசனை வந்தது. நிலையத்திற்கே ஃபோன் பண்ணி திருமதி ஒல்கா மிரோனவாவை விசாரித்தேன். நான் யார் என்று தெரிந்து கொண்டதும்—

"உங்களை எதிர்பார்த்துக் கீழே வரவேற்பறைக்குப் போயிருக்கிறார்..." என்றார் அங்கிருந்தவர்.

விஷயத்தைச் சொன்னேன்.
"கவலைப்படாதீர்கள்..." என்று சொன்னார்.

அவர் சொன்ன விபரப்படி, பத்தே நிமிஷத்தில் அங்கே போய் விடமுடிந்தது. என்றாலும் சொன்ன நேரத்திற்குப் போக முடியாத கூச்சம்.

"நிச்கிவோ..." என்றார், திருமதி மிரோனவா.

"இவரைத்தான் இவ்வளவு நேரமும் பார்த்திருந்தேன்..." என்று வரவேற்புப் பெண்மணியிடஞ் சொன்னார்.

'ரேடியோ மாஸ்கோ' கட்டடம், பல அடுக்குகள் கொண்ட பிரமாண்டமான கட்டடம். தமிழ்ப்பிரிவு பத்தாவதோ பன்னிரண்டாவதோ மாடியில் இருந்தது.

உள்ளே போனதும், கேள்விகள் எழுதப்பட்ட தாள் ஒன்றைத் தந்தார் ஒல்கா. இலக்கியம் மற்றும் சோவியத் நாட்டு அநுபவங்கள் பற்றிக் கேள்விகள், எழுத்து ஒத்திகை ஒன்றும் தேவைப்படவில்லை. ஸ்டுடியோ. குரல் பரிசீலனை, நேரேபதில்கள், பத்து நிமிஷப்பேட்டி.

வெளியே வந்ததும், "நன்றாக இருக்கிறது..." என்றார், ஒல்கா. அவருக்குத் தமிழ் நன்றாகப் பேச முடிகிறது. குரல், ரேடியோ மாஸ்கோ தமிழ் நேயர்களுக்குப் பரிச்சயமானதுதான்.

"எப்படி இருக்கிறது என்று கேட்கப் போகிறீர்களா?"

போட்டுக் காட்டினார். திருப்தியாகத்தானிருந்தது.

எல்லாம் முடிந்து, அரை மணி நேரத்தில் வெளியே வந்தாயிற்று. இவ்வளவு சுருக்கில், இவ்வளவு சுலபமாக ஒரு நிகழ்ச்சியை ஒலிப்பதிவு செய்து விட முடியுமா என்று வியப்பாயிருந்தது.